www.tamilarangam.net

நட்புறவுப்

# பாலம்

மே 1990


இலக்கிய மாத இதழ்

ரூ. 3-00




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




YESUDASAN.




R.K. LAXMAN.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# பாலம்

இலக்கிய மாத இதழ்
மே 1990

27

ஆசிரியர் :
இரா. திரவியம்

ஆசிரியர் குழு :
சமந்தா
இளம்பிறை
குமார்

தனியிதழ் ரூ. 3.00
ஆண்டுச் சந்தா ரூ. 30.00
அரையாண்டுச்சந்தா ரூ. 15.00

தொடர்பு முகவரி :
நிர்வாகி,
பாலம்
25, அருணாசலபுரம்
மெயின் ரோடு
அடையாறு சென்னை-20

நிர்வாக ஆசிரியர் :
அதியமான்


## பேச்சுவார்த்தை தேவை

இந்தியா பிரித்தானிய அரசிடமிருந்து விடுதலை பெற்ற சமயத்தில் காஷ்மீரை ஆண்ட மன்னர் ஹரிசிங், பிரதமர் நேருவுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்தார். அதே நேரத்தில் பாகிஸ்தான் தனது படைகளைக் காஷ்மீரில் இறக்கி காஷ்மீரின் மூன்றிலொரு பகுதியைப் பிடித்துக் கொண்டது. அந்தப் பகுதியின் பெயரே ஆஜாத் காஷ்மீர் என வழங்கப்படுகிறது.

பாகிஸ்தானியப் படைகள் வெளியேற வேண்டுமென ஐ.நா. சபையில் இந்தியா பிரச்சினையைக்கிளப்பியது. அதன் விளைவாக பாகிஸ்தானியப் படைகள் வெளியேற வேண்டும் என்றும் அவ்வாறு வெளியேறிய பின் காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்தி மக்கள் விருப்பமறிந்து காஷ்மீரை இந்தியாவுடனேயே விட்டு விடுவதா? சுதந்திரக் காஷ்மீராக இயங்க விடுவதா? என்று முடிவு செய்ய வேண்டும் எனத் தீர்மானிக்கப் பட்டது.

நேருவுடனும் காங்கிரஸ் கட்சியுடனும் நேசமுடன் இருந்த ஷேக் அப்துல்லாவும் அவரது தேசிய மாநாட்டுக் கட்சியும் முரண்பட நேர்ந்தது. இதன் தொடர்ச்சியே ஷேக் அப்துல்லா சிறைபிடிக்கப் பட்டதும் தமிழ்நாட்டில் சிறை வைக்கப்பட்டதும் ஆகும். இந்திராவால் விடுதலை செய்யப்பட்ட ஷேக் அப்துல்லா காஷ்மீர் விசேஷ அந்தஸ்து கொண்ட மாநிலமாக இந்தியாவுடன் நீடிக்க ஒப்புக்கொண்டு விட்டார்.

ஆஜாத் காஷ்மீரிலிருந்து பாகிஸ்தானியப்படைகள் வெளியேற வேண்டுமென ஷேக் அப்துல்லாவும் வலியுறுத்தி வந்தார். காஷ்மீர் மக்களின் கருத்தறிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பதெல்லாம் அடிபட்டுப் போனது.

ஷேக் அப்துல்லாவிற்குப் பின் ஃபரூக் அப்துல்லாவின் ஆட்சியும் மத்திய காங்கிரஸ் அரசியல் சதுரங்க விளையாட்டிற்கு இலக்கானது. இந்திய அரசோ காஷ்மீரின் விசேஷ அந்தஸ்தை அரசியல் சட்டத்தில் மட்டுமே விட்டு வைத்தது. காஷ்மீர் மக்கள் ஃபரூக் அப்துல்லாவுக்கு எதிராக மாறத் தொடங்கினர்.

காஷ்மீரில் முஸ்லீம் வகுப்பு வாதம் இன்று உச்ச கட்டத்தை எட்டியுள்ளது. இதற்கெல்லாம் காரணம் அரசியலில் துளியும் நாணயமாக நடந்து கொள்ளாதது தான். மத்திய அரசோ, காங்கிரஸ் கட்சியோ, தேசிய முன்னணியோ இந்தக் குற்றச்சாட்டிலிருந்து தப்பிக்கவே முடியாது.

காஷ்மீரை அதன் மக்கள் விரும்புவது போல் விட்டுவிட வேண்டியதுதான் என்று ஒரு கருத்து முன் வைக்கப்படுகிறது.

நிரந்தரத் தீர்வை எட்ட, அனைத்திந்தியக் கட்சிகள் காஷ்மீருக்கான விசேஷ அந்தஸ்தை அமல் நடத்தத் தடையாக இருக்கக்கூடாது. அரசியல் சட்டத்தின் 370-வது பிரிவை முனைமுறியாமல் நடைமுறைப் படுத்த இந்திய அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும். ஊரடங்கைத் தளர்த்த வேண்டும்; தேடுதல் வேட்டையை நிறுத்த வேண்டும். ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணியுடன் அரசியல் ரீதியாகப் பேச்சு வார்த்தையைத் தொடங்க வேண்டும். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காஷ்மீருக்கு ஏன் இந்த அவலம்?

□

எஸ். வி. ராஜதுரை

□

அனைத்திந்திய அளவில் பிரபல்யம் பெற்றுள்ள மலையாள எழுத்தாளரும், கேலிச் சித்திரக்காரருமான ஓ. வி. விஜயன், இலங்கையில் இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பு பற்றி எழுதிய கண்டனக் கட்டுரையொன்றில் சில பிரச்சனைகளை எழுப்பியிருந்தார்: ''காஷ்மீர் 'தேசிய' நீரோட்டத்தில் இணைக்கப்பட்டதற்கான முதன்மையான காரணம் என்ன? நேரு குடும்பத்தை அகதிகள் என்ற நிலையிலிருந்து காப்பற்ற வேண்டிய தேவை இருந்திருக்கவேண்டும். ஆயினும் இது ஒரு போதும் அச்சமில்லாமல் வெளிப்படையாக விவாதிக்கப் படப் போவதில்லை. நமது பேரரசால் தடை செய்யப்பட்டுள்ளவற்றில் இந்த விவகாரமும் ஒன்று.''

நமது பத்திரிகைகளிலோ அறிவுக்கூடங்களிலோ கீழ்க்காணும் கேள்விகள் எழுப்பப்பட்டதே இல்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

1. ஷேக் அப்துல்லா 18 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தது ஏன்?

2. அவர்மீது சுமத்தப்பட்ட தேசத் துரோக குற்றச்சாட்டு என்ன ஆயிற்று?

3. விசாரணை செய்யப்படாத ஒரு தேசத் துரோகியிடம், முதலமைச்சர் பொறுப்பு மீண்டும் ஒப்படைக்கப்பட்டது ஏன்?

4. ஸ்ரீநகரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் நேரு பொதுவாக்கெடுப்பு நடத்துவதுபற்றி காஷ்மீர் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி என்ன ஆயிற்று?

இக்கேள்விகளுடன் எழுப்பப்படவேண்டிய மற்றொரு கேள்வி: காஷ்மீரில் இன்று நடப்பது என்ன?

இவை மக்கள் மனத்திலே எழவிடாத வண்ணம் தொலைகாட்சியிலிருந்து பத்திரிகைகள் வரை; சோசலிஸ்ட் பொணாண்டசியிருந்து ஹிந்துவ்தா அத்வானி வரை ஜனநாயக உபேந்திராவிலிருந்து கம்யூனிஸ்ட் சுர்ஜித் வரை இந்தியாவின் ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளும் எதிர்க்கட்சி தலைவர்களும் ஒரு 'இந்து சாம்ராச்சியக்' கண்ணோட்டத்திலிருந்தே செயல்படுகின்றனர். இலங்கையில் இந்திய அமைதிப் படையினரின் நடவடிக்கைகள் பற்றியும், ஈழத் தமிழ் மக்களின் உண்மையான உணர்வுகளை சிதைத்துக் காட்டிய இந்தியத் தொலைக்காட்சி காஷ்மீர் விடயத்திலும் அதே பித்தலாட்டங்களை மேற்கொண்டு வருகிறது. காஷ்மீர் மக்களின் ஆர்வங்களைக் கடுகளவும் பிரதிநிதித்துவம் செய்யாத அகில இந்தியக் கட்சிகள்—அம் மக்களை ஒரு போதும் சந்தித்திராத இக்கட்சிகள்—காஷ்மீர் பிரச்சனையை தீர்ப்பதற்கான அரசாங்க குழுவில் இடம்பெற்று, காஷ்மீர் சென்று, மக்களைச் சந்திக்காமலேயே திரும்பி வந்துள்ளன.

''கிழக்கிந்தியக் கம்பெனியால் கட்டியமைக்கப்பட்ட இந்திய சாம்ராச்சியம், மக்களால் உடைக்கப்படாமல் இருக்கட்டும்'' என்ற விருப்பத்தையே அனைத்துக்கட்சிகளும் பகிர்ந்து கொள்கின்றன. இந்தியாவின் முக்கிய பிரச்சார சாதனங்களைத் தன்வசப்படுத்திக் கொண்டுள்ள பி. ஜே. பி., ஒரு அகண்ட பாரதத்தை, ஒரு பார்ப்பனிய இந்துப் பேரரசை நிறுவும் பொருட்டு, அதற்குக் குறுக்கே நிற்பவர்கள் அனைவரையும் தேசத் துரோகிகளாகச் சித்தரிக்கிறது.

தேசிய ஒருமைப்பாடு என்கிற பெயரால், தேசிய இனங்களின் நியாயமான போராட்டங்களை எதிர்க்கும் இந்தியக் கம்யூனிஸ்டுகளும் கூட இதே அகண்ட பாரதத்திற்குத்தான் வாக்காலதது வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். குறைந்த பட்சம் மனித உரிமைப் பிரச்சனை என்ற அளவில்கூட காஷ்மீரில் நடப்பதுபற்றி ஒரு நேர்மையான விவாதத்துக்கு அவர்கள் தயாராக இல்லை. இந்திய தேசிய வாதத்துக்கு வலதுசாரிகளும் இடதுசாரிகளும் இரையாகி விட்ட இச்சூழலில் காஷ்மீர் பற்றிய சில விவரங்களை வெளியிடுவது எமக்கு இன்றியமையாததாகிறது:

காஷ்மீருக்கு நேர்ந்த அவலம் என்ன? 1947இல் அது தனது தனித்தன்மையை,அடை-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாளத்தை, உறுதி செய்யத் தவறியதுதான். அன்று பாகிஸ்தான்படையெடுத்து வந்தபோது இந்தியாவின் உதவியை காஷ்மீர் மன்னர் ஹரிசிங் நாடினார். இந்தியாவுடன் காஷ்மீர் சேர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தம் 1947 அக்டோபர் 26ஆம் தேதி கையெழுத்தானது. அப்பொழுது இந்திய அரசு கொடுத்த வாக்குறுதி: ''பொது வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாக மக்கள் தீர்ப்பு வழங்குவதன் அடிப்படையிலேயே காஷ்மீர் இந்தியாவுடன் சேர்த்துக் கொள்ளப்படும்.'' அதே ஆண்டு நவம்பர் 2ஆம் தேதியன்று தனது வானொலிப் பேச்சில் நேரு கூறினார்: ''காஷ்மீரின் எதிர்காலம் இறுதியில் மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டியது என்பதை நாங்கள் பிரகடனப் படுத்தியுள்ளோம். இது காஷ்மீர் மக்களுக்கு மட்டுமல்ல; முழு உலகிற்கும் நாங்கள் கொடுத்துள்ள வாக்குறு யாகும்''. இந்த அடிப்படையில் ஷேக் அப்துல்லாவின் அரசாங்கம் நிறுவப் பட்டது. இந்திய அரசியல் சட்டம் 370 இன் படி காஷ்மீருக்கு சிறப்புத் தகுதி கொடுக்கப் பட்டது. அதன்படி பாதுகாப்பு, வெளி விவகாரங்கள், தகவல் தொடர்பு ஆகியன மட்டுமே மத்திய அரசாங்கத்துக்கு சேர்ந்த தாகும். ஆனால் 1953 ஆகஸ்டு 9ஆம் தேதி யன்று ஷேக் அப்துல்லா தேசத் துரோகக் குற்றச்சாட்டின்கீழ் கைது செய்யப்பட்டார். 1954இல் க ஷ்மீர் சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரத்தையும் மத்திய அரசு எடுத்துக் கொண்டது பின்பு 1957 இல் நேரு, ''காஷ்மீர் இந்தியாவுடன் சேர்வதா வேண்டாமா என்ற வாக்கெடுப்பு வேண்டாம் என்றும் காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாகிவிட்டது என்பது முடிந்த முடிவாகிவிட்டது'' என்றும் அறிவித்தார். அதற்கு அவர் கூறிய காரணம், ''பாகிஸ்தானும் அமெரிக்காவும் ஒரு இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டதால், புவிசார் அரசியல் நலனில ஒரு மாற்றம ஏற்பட்டுளளது. எனவே இனி வாக்கெடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை''.

அன்றிலிருந்து இன்றுவரை இந்திய அரசாங்கம் காஷ்மீரை ஒரு உள்நாட்டுக் காலனியாகவே நடத்திக் கொண்டு வருவதைக் காணலாம். இது சம்பந்தமான சில வரலாற்றுச் சம்பவங்களை திரும்பிப் பார்கக வேண்டும்.

1. ஷேக் அப்துல்லா கைது செய்யப்பட்ட பிறகு, பக்ஷி குலாம் முகமது தலைமையில் ஒரு மாநில அரசாங்கம் காஷ்மீர் மக்கள்மீது திணிக்கப்பட்டது. 1963ல் இந்த பக்ஷி குலாம் முகமது இந்திய பாதுகாப்புச் சட்டததினகீழ் கைது செய்யப்பட்டு சாதிக் என்பவர் ஆட்சியில அமர்த்தப்பட்டார்.

அவரது ஆட்சிக் காலத்தில் தான் இந்திய அரசியல் சட்டம் 249 ஜம்மு-காஷ்மீருக்கு விரிவு படுத்தப்பட்டது. இச்சட்டத்தின்படி, காஷ்மீர் சம்பந்தப்பட்ட எல்லாவிதமான சட்டங்களையும மத்திய அரசாங்கத்தால் இயற்ற முடியும். அதுவரை காஷ்மீரில் இருந்த ஆளுநர், முதலமைச்சர் ஆகிய பதவிகளின் பெயர்கள் முறையே சாதத்-இ-ரியாசத், வாஹித்-இ-ஆசாத் என்றே அழைக்கப்பட்டு வந்தன. ஆனால் 1965 மார்ச் 30 ஆம் தேதியிலிருந்து இப்பெயர்கள் மாற்றப்பட்டு மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போலவே ஆளுநர், முதலமைச்சர் என்றே அழைக்கப்படவேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. 1971 இந்தியா—பாகிஸ்தான் யுத்தம் நடந்து முடிந்த பிறகு 1972இல் இரு நாடுகளுக்குமிடையே சிம்லா ஒப்பந்தம் கையெழுத்தானது அப்போது இரு நாடுகளும் ஜம்மு-காஷ்மீர், தாவாவிலுள்ள ஒரு பிரதேசம் என்றும், அந்தந்த அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள எல்லைகள் இறுதித் தீர்வு ஏற்படும் வரை மதிக்கப்படவேண்டும் என்றும் ஒப்புக் கொண்டன. அதாவது காஷ்மீர், இந்தியப் பகுதி என்றும் பாகிஸ்தான் பகுதி யென்றும் பிரிக்கப்பட்டிருந்தது அங்கீகரிக்கப் பட்டது.

3. 1971இல் முதலமைச்சராக நியமிக்கப் பட்ட சையதுமீர்காசிம் என்பவரின் ஆட்சியின் கீழ் மத்திய அரசாங்கப் பணியைச் சேர்ந்த I.A.S.,I.P.S. அதிகாரிகள் காஷ்மீர் நிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். அந்த ஆதிக்கம் இன்றுவரை தொடர்கிறது.

4. நீண்ட காலம் சிறை வாசத்திற்குப் பிறகு விடுதலை செய்யப்பட்ட ஷேக் அப்துல்லாவிற்கும் இந்திராகாந்திக்குமிடையே 1975 பிப்ரவரி 24 ஆம்தேதி ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. அதன்படி ஜம்மு-காஷ்மீர் இந்தியாவினுடைய சட்டபூர்வமான பகுதியாயிற்று. அதுவரை காஷமீரின் சுயநிர்ணய உரிமை பறறிப் பேசி வந்த ஷேக் அப்துலலாவின் கட்சியான தேசிய மாநாடு கட்சி இந்திய அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்திற்கு பணிந்து போயிற்று. ஆயினும் காஷ்மீர் மக்களைப் பொறுத்தவரை, அவர்களது ஆர்வங்களை வெளிபபடுத்தும் குறியீடாகவே அக்கட்சி கருதப்பட்டு வந்தது.

5. 1977இல் காங்கிரஸ் கட்சிக்கும், தேசிய மாநாட்டு கட்சிக்கும் இருந்த உறவு முறிநதது. சட்டசபை கலைக்கப்பட்டு, திடீர் தேர்தல் நடத்தப்பட்டது. காஷ்மீர் வரலாற்றிலேயே நேர்மையாக நடந்த தேர்தல் இது ஒன்றுதான். இத்தேர்தலில் மிகப்பெரும் வெற்றியை தேசிய மாநாடு கட்சி ஈட்டியது. காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



6. 1982இல் ஷேக் அப்துல்லா பதவி விலகி, பரூக் அப்துல்லாவை தனது அரசியல் வாரிசாக நியமனம் செய்தார். அப்போது ஆளுநராக இருந்த பி. கே. நேரு மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை காஷ்மீர் மக்கள் மீது திணிப்பதில் விசுவாசமாக இல்லாத காரணத்தால் அவருக்குப் பதிலாக ஜக்மோகன் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

இதனால் திருப்தி அடைந்த பரூக் காஷ்மீர் எதிர்கட்சிகளின் ஒத்துழைப்பை நாடினார். இதன் காரணமாக 1984இல் பரூக் அமைச்சரவை பதவி நீக்கம் செய்யப்பட்டது; ஜி. எம். ஷா என்பவர் முதலமைச்சர் ஆகப்பட்டார். 1986இல் ஜக்மோகனும் மத்திய அரசாங்கமும் சூழ்ச்சி செய்து அனந்த நாக் என்ற மாவட்டத்தில் ஒரு வகுப்புக் கலவரத்தை மூட்டி விட்டனர். இதனைக் காரணம் காட்டி ஜி. எம். ஷா பதவி நீக்கம் செய்யப்பட்டார். கவர்னர் ஆட்சி அறிவிக்கப் பட்டது.

7. ஒரு சில மாதங்களுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்த காரணத்தால் பரூக் மீண்டும் முதலமைச்சர் ஆக்கப் பட்டார்.

8. 1987இல் நடந்த தேர்தலில் மிகக் கேவலமான, வெட்கக்கேடான மோசடிகள் மூலம் காஷ்மீரில் உள்ள எதிர்கட்சியான முஸ்லீம் ஐக்கிய முன்னணி தோற்கடிக்கப் பட்டது.

9. 1987 முதல் 1990 ஜனவரி 18 வரை பரூக் அரசாங்கம் காஷ்மீர் மக்களின் கடும் எதிர்ப்பையும் அதிருப்தியையும் சந்தித்தது—ஊழலும், லஞ்சமும் பெருகியதும், காஷ்மீர் மக்களின் உரிமை மென்மேலும் பறிபோய் கொண்டிருந்ததுமாகும். இன்று வரை காஷ்மீரி மொழி எந்தவொரு மட்டத்திலும் ஆட்சி மொழியாகவோ, பயிற்று மொழியாகவோ இல்லை. காஷ்மீர் மக்களின் கலாச்சார, தனித்தன்மையை அழிக்கும் வகையில் மத்திய அரசால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. இந்தித் திணிப்பும், சமஸ்கிருத மயமாக்கலும் தொடர்ந்து நடந்தன, காஷ்மீரிலுள்ள வானொலி நிலையங்களில், செய்தி வாசிப்பவர்கள் அனைவரும் குடியரசுத் தலைவர்,குடியரசுத் துணைத்தலைவர்,பிரதம அமைச்சர் ஆகியோரை முறையே ராஷ்டிரபதி உபராஷ்டிரபதி பிரதம மந்திரி என்றே அழைக்க வேண்டும் என்றும் இந்தியாவை பாரத் என்று அழைக்க வேண்டும் என்றும் 12. 1. 1990 அன்று உத்தரவிடப்பட்டது.

இந்த உரிமைப் பறிப்பிற்கு எதிராகப் போராடுவோரை எல்லாம் தேசத்துரோகிகள், பாகிஸ்தான் ஏஜெண்டுகள் என்று முத்திரை குத்தி கடுமையாக ஒடுக்குவது என்பது பரூக் மீண்டும் ஆட்சிக்கு வந்த 1987 காலந் தொட்டே நடந்து வந்தது.

இந்தப் பின்னணியில்தான் காஷ்மீர் மக்களுடைய தனித்தன்மையையும் சுயநிர்ணய உரிமையையும் போராடிப் பெறுவதற்காக, ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி (JKLF) என்ற அமைப்பு வளர்ந்து வந்தது. அது ஒரு வகுப்புவாத அமைப்பு அல்ல. பாகிஸ்தானை ஆதரிக்கும் அமைப்புமல்ல. இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் கட்டுப்பாட்டிலிருந்தும் காஷ்மீர்ப் பகுதிகளை விடுவித்து, ஒன்றிணைந்த காஷ்மீரிகளின் சுதந்திரத்தை உத்தரவாதம் செய்வதென்பதுதான் அதன் குறிக்கோள். காஷ்மீரிலுள்ள முஸ்லீம்கள், காஷ்மீர் பண்டிட்கள் (இந்துப் பார்ப்பனர்கள்) ஆகிய இரு சாரார்களையும் சமமாகப் பாவிக்கும் அமைப்புதான் ஜே. கே. எல். எப்.

இன்று இந்தியத் துணைக்கண்டம் முழுவதற்கும் காவியுடை அணிவித்து அகண்ட பாரதத்தை—ஒரு இந்து சாம்ராஜ்யத்தை—உருவாக்கமுனையும் பி.ஜே. பி.யின் பாத்திரத்தைப் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். 1952 இல் அப்போதுதான் புதிதாக உருவாகியிருந்த ஜன சங்கம், ஜம்மு-காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க வேண்டும் என்ற போராட்டத்தை துவக்கியது. தேசிய மாநாட்டு கட்சியை, இந்திய விரோதக் கட்சி என சித்தரித்தது. ஜன சங்கத்தின் தலைவர் சியாம் பிரகாஷ் முகர்ஜி,நேருவின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் பஞ்சாப் அரசாங்கத்தின் அதிகாரிகள் கூட வர, தடையை மீறி ஜம்முவிற்குள் பிரவேசித்தார். சட்டம், அமைதி குலைவின் காரணமாக கைது செய்யப்பட்டார். தனக்கு ஏற்கனவே இருந்த நோயின் காரணமாக சிறையில் மரணமடைந்தார். 'இந்து தேசத்தைக் காப்பாற்ற வந்த மாபெரும் அவதார புருஷராக', அவரைச் சித்தரித்த ஜன சங்கத்திற்கு, ஷேக் அப்துல்லாவை பதவியிலிருந்து விரட்ட ஒரு வலுவான காரணம் கிடைத்தது. அன்று முதல் இன்று வரை வகுப்புவாத அரசியலையே தொழிலாகக் கொண்டுள்ள பி. ஜே. பி. (அதாவது முன்னாள் ஜன சங்கம்) இந்த ஆண்டு சனவரியில் இந்து மதவெறியர் ஜக்மோகன், காஷ்மீரின் ஆளுநராக மீண்டும் நியமிக்கப்பட்டமை குறித்து பெரும் உற்சாகம் அடைந்துள்ளது. ஜக்மோகனை மக்களின் காவலர் என்று பிரச்சாரம் செய்ய எல்லா உத்திகளையும் கையாளுகிறது. அக்கட்சியின் ஊது குழலாக விளங்கும் 'இந்தியா டுடே' பத்திரிகை (பிப்ரவரி 15, 1990) யில் உள்ள கட்டுரையில் அனந்தநாக் என்ற ஊரில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களுடன் ஜக்மோகன் அன்னியோன்னியமாக அளவளாவிக் கொண்டிருப்பதைப் போன்ற ஒரு புகைப்படமும் வெளியிட்டுள்ளது. அந்தக் கட்டுரையாளர் காஷ்மீருக்குப் போகாமலேயே அக்கட்டுரையை எழுதியுள்ளார் என்பதையும் அப்புகைப்படம் பல ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட ஒன்று என்பதையும் காஷ்மீருக்குச் சென்று வந்த அறிஞர்கள் அம்பலப்படுத்தி எழுதியுள்ளனர். (Indian's kashmir war, Economic and Political Weekly, March 31,1990)

கருத்துச் சுதந்திரம் பற்றி அதிகமாகப் பேசும் வி. பி. சிங் அரசாங்கம் இந்த அறிஞர்களின் விடுகளுக்கு உளவுத் துறை அதிகாரிகளை அனுப்பி, ஓயாத தொல்லை கொடுத்து வருகிறது. (சுகாஸினி முலாய் என்பவர் 'இந்தியன் எக்ஸ்பிரசுக்கு 23-4-90 எழுதிய கடிதம்.)

காஷ்மீர் பிரச்சனைக்கு ஒரு வகுப்புவண்ணம் கொடுப்பதாக ஜக்மோகன் மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஒன்று காஷ்மீர் பண்டிட்களை காஷ்மீர் பள்ளத்தாக்கிலிருந்து வலுக்கட்டாயமாக ஜம்மு பிரதேசத்திற்கு குடியேற்றியதுதான். காஷ்மீர் முஸ்லீம்கள் அனைவருமே, இந்துமத விரோதிகள் அல்லது இந்திய விரோதிகள் என்ற ஒரு அபிப்ராயத்தை உருவாக்குவதுதான் அவரதுநோக்கம். தீவிர வாதிகளை ஒடுக்குவது என்ற பெயரால் இந்திய அரசாங்கம் பஞ்சாபில் கடந்த 6 ஆண்டுகளாக செய்து வரும் அதே செயலை, இன்று காஷ்மீரிலும் ஜக்மோகன் மேற்கொண்டு வருகிறார்.

அண்மையில் பத்மபூஷன் விருது வழங்கப்பட்டவரும், தொழிற்சங்கத் தலைவரும் சமூக ஊழியருமான இந்தர் மோகன் காஷ்மீர் சென்று வந்தபிறகு எழுதியுள்ள கட்டுரையொன்றிலிருந்து (Repression no Solution by Inder Mohan, Mainstream, April, 1990) சில செய்திகளைத் தருகின்றோம்:

1. அவர் சந்தித்த நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள் பத்திரிகையாளர்கள் அதிகாரிகள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், இளைஞர்கள் ஆகியோரிடத்தில் மேலோங்கியிருக்கும் உணர்வு, ''காஷ்மீர் முஸ்லீம்களும், பண்டிட்களும் சகோதரர்கள் தாம்'' என்ற உணர்வுதான். ''நாங்கள் அனைவரும் காஷ்மீரிகள் தான். வலுக்கட்டாயமாக ஜம்முவிற்கு அழைத்துச் செல்லப்பட்ட காஷ்மீர் பண்டிட்கள் திரும்பி வரவேண்டும். அவர்களுக்கு உண்மையான பாதுகாப்பை வழங்கக் கூடியவர்கள் நாங்கள்தான்; பாதுகாப்புப் படையினர் அல்லர்.

2. காஷ்மீர் பண்டிட்களிடையே திட்டமிட்ட முறையில் ஒரு பீதியைப் பரப்பி அவர்கள் ஜம்முவிற்கு சென்றுவிட வேண்டும் என்று கூறப்பட்டது. பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகளை கண்டுபிடிப்பதற்காக, எல்லா வீடுகளும் சோதனை நடைபெறும் என்றும், அதனால் குழப்பம் ஏற்பட்டால் முஸ்லீம்கள் யார்? இந்துக்கள் யார்? என்பது பாதுகாப்புப் படையினருக்குத் தெரியாமல் போய்விடும் என்றும், அதன் காரணமாக இந்துபண்டிட்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாக நேரிடும் அசம்பாவிதம் நடைபெறலாம் என்றும் ஜக்மோகன் நிர்வாகம் பிரச்சாரம் செய்தது.

3. JKLF, மக்கள் மத்தியில் செல்வாக்குள்ள இயக்கம். மதச் சார்பற்ற அந்த அமைப்பு ஜம்மு, காஷ்மீர், லடாக் பகுதியிலுள்ள சிறுபான்மை இனத்தவரின் உரிமையை மதிக்கிறது. இந்த அமைப்பிற்கும் பிற அமைப்பிற்கும் பெரும் வேறுபாடுண்டு.

4. சோவியத் யூனியனிலும், ஐரோப்பாவிலும் கிளர்ந்தெழுந்துள்ள தேசிய இனங்களின் உரிமைக்கோரிக்கைகள் காஷ்மீர் மக்கள் மீதும் தாக்கம் ஏற்படுத்தியுள்ளது.

5. சர்வ கட்சிக் கூட்டங்களின் ஒத்துழைப்பு என்று பேசுபவர்கள் இப்பிரச்சனையைத் தீர்ப்பதில் காஷ்மீர் மக்களின் பங்களிப்பு பற்றி சிறிதுகூட அக்கறைபடுவதில்லை. J. K L. F உடன் பேச்சு வார்த்தை நடத்துவதும், ஒடுக்கு முறையைத் தவிர்ப்பதுந்தான் பிரச்சனைக்கான தீர்வுக்கு வழி வகுக்கும்.

முடிவாக சில விடயங்களை நாம் வலியுறுத்திக் கூற வேண்டும்.

> பாகிஸ்தானின் தூண்டுதலின் பேரிலேயே தீவிரவாதிகள் செயல் படுகிறார்கள் என்பது முழு உண்மை அல்ல. பல ஆண்டுகளாகவே பரஸ்பரம் பகைமை பாராட்டி வரும் இந்தியாவும் பாகிஸ்தானும், ஒருவர் குட்டையில் மற்றொருவர் மீன்பிடித்து வருவது வரலாறாகி விட்டது. கிழக்கு வங்க, பலுஸ்சிதான் பிரச்சனைகளை இந்தியா தனக்கு சாதமாக்கிக் கொண்டது போல பஞ்சாப், காஷ்மீர் பிரச்சனைகளை பாகிஸ்தான் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறது. காஷ்மீரில் பாகிஸ்தான் ஆதரவு மற்றும் முஸ்லீம் அடிப்படைவாத குழுக்கள் தோன்றியிருப்பதற்குக் காரணம் இந்தியாவின் ஒடுக்குமுறைக் கொள்கை தான். மதத்தால் இஸ்லாமியர்களாகவும், பண்பாட்டால் காஷ்மீரிகளாகவும் இருந்து வந்தமக்களை குறிப்பாக இந்து பார்ப்பனர்களை எப்போதுமே தம் சகோதரர்களாகப் பாவித்து வந்த மக்களை முஸ்லீம் அடிப்படை வாதத்திடம் சரணடையுமாறு செய்துவருவது இந்திய அரசின் பாசிச ஒடுக்குமுறைதான். □

www.tamilarangam.net

## நவீன ஓவியம்

# சாவு குறித்து எனது எண்ணங்களையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்தி கொள்ளும்வரை வாழப் போகிறேன்.

நவீன ஓவியத்தை மையமாக வைத்து கலைஞன் முன்னுள்ள பிரச்சனைகளை விவாதிக்கலாம்.

நவீன ஓவியம் என்பது பம்பாய், டெல்லி, கல்கத்தா, சென்னை போன்ற பெரு நகரங்களின் காட்சியங்களிலும் நட்சத்திர ஓட்டல்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டு ஆயிரக்கணக்கில் விலை பேசப்படுவதாய் உள்ளது. ஹூசைன் ஓவியம் 50 ஆயிரம் —அறுபதாயிரம் என்று வாங்கப்பட்டு பரபரப்புச் செய்தியாகிறது கலையுலக வட்டாரத்தில். இதில் அடித்தட்டு மக்களோ நடுத்தர வர்க்கத்தினரோ கலந்து கொள்ள சாத்தியமில்லை. அதனாலேயே அவர்களுக்கு அதில் அக்கறை ஏற்படவும் வாய்ப்பில்லை. இது தர்க்க ரீதியாகவும் சரிதான்.

ஆக, பெரும் பகுதியினராக உள்ளவர்களின் பங்கேற்பும் அக்கறையும் பெறாத நவீன ஓவியம், மேல்தட்டு பிரிவினரின் ரசனைக்குரியதாய், அவர்கள் சம்பந்தப்பட்டதாகவே ஆகிவிடுகிறது.

ஆபாசமான ஓவியங்களை காட்சிக்கு வைத்தார் என்பதற்காக, அவரது அறையிலுள்ள ஆபாச ஓவியங்கள் போலீசால் அகற்றப்பட்டு அதன்பின் அவர் லண்டனில் தங்கி சுவரோவியங்கள் வரைந்து கொண்டிருந்தசமயம்(1951ல்) சவ்ஸா எழுதினார்:

''வாழ்வில் என் பிரதான ஈடுபாடு ஓவியமோ எழுத்தோ சமுதாயமோ அல்ல. உணவு தான். ஆம், உணவு தான். பாப்கார்னிலிருந்து வறுத்த வாத்து வரை சாப்பிடக் கூடியது எல்லாம். வயிற்றை நிரப்புவது தான் நோக்கம். அது தான் முழு நோக்கம் வாழ்வில். இது தகுதியுடையவர்களிடையேயான போராட்டம். நான் எவ்வளவு தகுதி பெற்றிருக்க வேண்டுமோ அவ்வளவு பெற்றுள்ளேன்... நான் சனத்தில் அழிந்து போகும் பூச்சியல்ல. மனிதன். பல அம்சங்களில் மனிதத் தன்மை அற்றிருக்கலாம். சாவு குறித்து எனது எண்ணங்களையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்திக் கொள்ளும் வரை நான் வாழப் போகிறேன்... (இந்து, 12.3.89)

சவ்ஸாவின் படைப்புகள் எந்த தரத்திலானவை, ஆபாசமானவையா— இல்லையா? என்பவை ஒருபுறமிருக்கட்டும். ஒரு கலைஞனை இப்படி பேச வைத்திருக்கக் கூடாது. கலைஞனை எதிர்கொள்வது போலீஸ் மூலமா? மரபையும் சம்பிரதாயத்தையும் போற்றிப் பாதுகாக்கும் பாதுகாவலர்களின் போலித் தன்மையால் அயோக்கியத்தனங்களால் மரபும் சம்பிரதாயமும் இற்று விழுந்து கொண்டிருக்கின்றன கண்முன். அப்படியிருக்க நிர்வாண உருவங்களை வரைந்த சவ்ஸாவினால் அப்படியொன்றும் அவற்றுக்கு இழுக்கில்லை. சிவனையும் பார்வதியையும் நந்தி மீதுள்ள நிலையில் காதலர்களாகக் காட்டிய அக்பர் பாதம்சியினால் குடி முழுகிப் போய் விடாது.

அரசுக்கு எதிராக எழுதினார் என்பதற்காகவே பொய் வழக்குகள் ஜோடிக்கப்பட்டு வரவரராவும் செரபண்டராஜூம் நீண்ட நாள் சிறையில் வதைக்கப்பட்டனர். எழுத்தின் மூலமாகவே அவர்களை எதிர்கொண்டு சமாளித்திட அரசுக்குத் திராணியில்லை. சால்மன் ருஷ்டி இசுலாத்துக்கு எதிராக எழுதினார் என்பதற்காக இந்தியா போன்ற நாடுகள் நூலைத் தடை செய்கின்றன; ஈரான் மரண தண்டனையே பிறப்பிக்கிறது. ருஷ்டி எழுதிய முறை கண்ணியக் குறைவானது என்றாலும் கூட அதனை எதிர்கொள்வது இப்படியா? காட்டுமிராண்டித்தனமாக, சமாதானத்தையும் மக்கள் மேன்மையையும் இஸ்லாம் விரும்புகின்றது என்று கூறிக் கொண்டே இபபடி செயல்

சா. தேவதாஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டால் அது இஸ்லாத்தின் விகசிப்பா? ஈவிரக்கமற்ற கொடூரனின் கூக்குரலா? இஸ்லாம் சரியாக இருக்கும் பட்சத்தில், அதன் நடைமுறைகள் சமூக நிலவரத்துடன் பொருந்தி வருகின்றன என்னும் பட்சத்தில்,அது இன்னும் வாழ்வுக்கு இன்றிமையாத ஒன்றுதான் என்று மக்கள் உணரும் பட்சத்தில் நூறு ருஷ்டிகள் ஒரே சமயத்தில் எழுதினாலும் என்ன சாதித்து விடமுடியும்? ஒரு ருஷ்டிக்கே இஸ்லாம் இப்படி நடுங்கினால், இஸ்லாத்தில் ஏதோ பிசகு என்றல்லவா ஆகும்.

அப்படியென்றால் இவர்கள் செய்வது சரியா? அவர்களது விலகல்களை பொறுப்பற்ற தன்மைகளை விவாதத்தின் மூலமாகத்தான் எதிர்கொள்ள வேண்டும். கலைஞரிடையேயும் வாசகரிடையேயும் ஆரோக்கியமான திறந்த பரிமாற்றங்கள் மூலம் இதனை சரிப்படுத்த வேண்டும். கலையின் பாதுகாப்புக்கு கலையின் வளர்ச்சிக்கு கலையுணர்ச்சிதான் தேவையானது. தருமு சிவராமு குறிப்பிட்ட மாதிரி, 'மாதா கோயிலும் போலீசும் அங்கே நுழைந்தால் கலை செத்து விடும்.' மறுமலர்ச்சி காலத்திலிருந்து இன்று வரை நிர்வாணஓவியங்கள் வரைவது ஓவியர்களிடையே ஒரு போக்காக உள்ளது. பெண் உருவத்தை நிர்வாண நிலையில் வடிப்பது சவாலுக்குரிய ஓவிய கருப்பொருளாகவும் அந்நிலையிலதான் பெண் முழுப் பரிமாணத்தில் காட்சியளிக்கிறவள் என்னும் ஒரு புரிந்து கொள்ளலின் அடிப்படையில் இது நிகழ்ந்து வருகின்றது. அதுபோலவே, அடிப்படை திரிகோணமிதி வடிவமைப்புகளும் உடற்கூற்று இயல்புகளும் நிலவியல் சாட்சிகளும் வண்ணங்களின் சேர்க்கைகளில் விளைவதும—இவற்றில் ஈடுபடுவது கலைஞனுக்கு தொழில் நேர்த்தி ஏற்படுத்தும். டாவின்சியின் குறிப்புப் புத்தகத்தில் குதிரையின் குளம்பு,கால் நிலைகள், பிடரி சிலிர்த்திருப்பது, பெண் முக பாவங்கள்,சாயல்கள் போன்றவற்றையெல்லாம் தீட்டிப் பார்த்திருப்பதை அறிகிறோம் வரைவு கச்சிதமாக அமைய இவையெல்லாம் பயிற்சி. இதையே ஓவியத்திற்குரியவிஷயமாக்குவது கலைஞனை கேள்விக்குள்ளாக்குகிறது. சமூகத்தில் வறுமையும், வரதட்சனையும், வேலையின்மையும் அரசியல் ஊழல்களும் என்று எண்ணற்ற பிரச்சனைகள், தத்துவார்த்த சிக்கல்கள் இருக்கும் போது காட்சியகத்தில் நிர்வாண பெண் உருவங்களை பார்வைக்கு வைப்பது மனச்சாட்சி இன்மையை அல்லவா காட்டும்.

பிகாசோ அவரது காதலி ஜாகுலின் ஹ..டின்சிறுநீர்கழிப்பதாக ஒரு ஓவியம். எலும்பும் தோலுமான ஒரு பெண்ணை கூரிய நகங்கள் குத்திக் கிழிப்பதாக ஒரு ஓவியம் என்றெல்லாம் வரைந்திருக்கிறார். அவரை விரும்பிய பெண்கள் எல்லாம் மாடலாக நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. ஸ்பெயின் உள்நாட்டுப் போரை 'கூர்னிகா'வாக உருவாக்கிய பிகாசோ இப்படியும் செயல்பட்டிருக்கிறார். மேதை என்ற ஒளிவட்டம் அவருக்கு அலங்கரிக்கப்பட்டு விட்டதால் அவரை யாரும் கேள்விக்குள்ளாககத் தயங்குகின்றனர். 'இவ்வளவு விஷயங்கள் உள்ளவர் அர்த்தமில்லாமல் எதுவும் செய்வாரா?' என்று உள்ளுக்குள் சமாதானம் அடைந்து விடுகின்றனர். மக்களை விட்டு நீங்கி சமூக நீரோட்டங்களிலிருந்து விலக்கிக் கொண்டு செய்நேர்த்தியை வைத்துக் கொண்டு மூளையில் விஷயங்களை கற்பிதம் செய்து செயல்படுவதால்தான் இந்த விபரீதங்கள். டச்சு ஓவியர்கள் ஒரு காலத்தில் சலனமற்ற தன்மையை—அதாவது, ஆடாது அசையாது இருக்கும் நாற்காலி, மேசை, அதன் மீதுள்ள தட்டு. கூஜா என்று தீட்டினார்களே அது போல அர்த்தமற்ற செய்கைகள்.

நிலவியல் காட்சியின் அற்புதமான அனுபவம், வாழ்க்கைச் சம்பவங்களின் புதுமை இவற்றை நீர்வண்ணமாகவோ தைல வண்ணமாகவோ கோடுகளாலோ வடித்து சக மனிதனுடன் அதனைப் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்ற உந்துதல்தானே ஓவியச்செயல்பாடு. இயற்கையோடும், பிரபஞ்சத்தோடும் சமூகத்தோடும் கலந்து உறவாடி தன்னை இழந்து தான் பெற்றதை, ஆவேசம் கொண்டு சிலிர்த்ததை, வேதனையில் துவண்டு போனதை பரவசத்தில் பிதற்றியதையெல்லாம் தூரிகை மூலம் அழியாதனவாக்கி மானுடனின் ஆளுமையை விகசிக்க உதவுபவன் தானே கலைஞன் கலைஞன் அப்பணியை சரிவரச் செய்தால், முழுமையாகச் செய்திடும் சூழல் அமையும் பட்சத்தில் சவ்லா போல சமூகத்தின் மீதே பழிவாங்கும் தோரணையில்பேசவேண்டிய சந்தர்ப்பம் கிடைத்திருக்குமா?

நவீன ஓவியம் குறித்த விமர்சனங்களில்-அதுவும் தயூப் மேத்தா, சவ்லா, அக்பர் பாதம்சி போன்றோரின் ஓவியங்கள் குறித்த மதிப்புரைகளில்-வண்ணங்களின் சேர்க்கையும், பிரதானப்படுத்தியிருக்கும் வண்ணமும், கோடுகளின் லாவகமும்... என்றவாறே பேசப்படுகிறது. ஓவியத்தை உருவாக்கிடும் கருவிகள் இவை. கருவிகளே விஷயங்களாகி விடுகின்றன. ஏன, சில ஓவியர்களே பிரகடனப்படுத்தியிருக்கின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



றனர். ''கோடுகளும் வண்ணங்களும் தான் எனது ஓவியம். அவற்றில் மட்டுமே ஓவியம் உள்ளது'' என்று இப்படிச் கூறும்போது கலைஞன் தனது இருப்பிற்கு தானே மறுதலை அளிப்பவன் ஆகின்றான்.

**பருண்மையான பிரச்சனைகளை சித்திரித்தால் தான் கலைஞன் சமூகப் பொறுப்பை நிறைவேற்றியவன் ஆகின்றான் என்பதும் சரியல்ல.** தனது அக உலகை சித்திரித்தாலும்-மனித நேயமும் அன்பும் ஊடுருவிப் பாயும்போது அக்கலை மகத்தானதாகவேஇருக்கிறது தத்துவார்த்த நாவலாசிரியர் என்றழைக்கப்படும் ராஜாராவ் கூட 'Human suffering concerns me' என்று உரத்துக் கூறுகின்றார். அப்படியானால், சில கலைஞர்கள் பிரச்சனைகளை நேரடியாக அவற்றின் பின்னணியுடன் விவரிக்க, வேறு சிலரோ மனித குலத்தின் துயரங்களால் பாதிப்புற்று அதனை அவர்களுக்குப் பரிச்சயமான இழைகளைத் தொட்டு ஓடவிடுகின்றனர் என்று கூறலாமா?

நிலவியல் காட்சிகளை, வண்ணங்களின் மீது ஒளிபடும் போது நிகழும் விந்தைகளை விநோதங்களை, சித்திர விசித்திரங்களை வடித்துத் தந்த டர்னரின் படைப்புகளில் அவரது மனித நேயம் வெளிப்படுகிறது என்று கூறினார் ஜான்ரஸ்கின். எப்படி? கடலின் கொந்தளிப்பில் படகின் தவிப்பில் தொடு வானில் மேகங்களின் சஞ்சரிப்பில் தனது நெஞ்சத்துக் குமுறல்களையும் அநீதியால் பட்ட வேதனைகளையும் வெளிப்படுத்தினார் என்று விளக்குகிறார் அவர். இன்றைக்குக் கூட விவான் சுந்தரம் நிலவியல் ஓவியங்கள் வரையும் போதும் லட்சுமணன் சிரேஷ்டா இமாலயத்து பனிச் சிகரங்களின் மோனத்தையும் ஹம்பி மலைப் பகுதிகளின் அலாதியான தனிமை அனுபவத்தையும் தீட்டும் போதும் அதில் இயற்கை மட்டும் வெளிப்படவில்லை. இயற்கையில் ஈடுபடும்போது இச்சமூகம் பால் அவர்கள் கொண்ட அக்கறையும் அன்பும் தோய்ந்துவிடுகின்றன அதனால் தான் பனிப்பாறைகளின் குறுக்காக நிரடல் போன்ற வண்ணக் கீற்று இனந் தெரியாத சோகத்தையும், இவைகளின் எழுச்சியும் பறவைகளின் படபடப்பும் இதயங்களின் துடிப்பை உணர்த்துதலும் கொண்டுள்ளன. சிரேஷ்டாவின் ஓவியங்களை ஒருவர் 'இயற்கைக்கும் பிரக்ஞைக்கும் இடையேயான உரையாடல்கள் என்றார். இவற்றின் இன்னொரு அம்சம், இவை ஒன்றுக்கு உருக்கொடுப்பதாகவும் சூக்குமமானதாகவும் ஒரே சமயத்தில் உள்ளன. அனுபூதித்தன்மை தரும் அளவுக்கு ஆற்றல் கொண்டவை. நிசப்தத்தில் இரு கரைகளிலும் இயக்கங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதாகத் தோன்றுபவை. இவர் பிரதிபலிப்பு இப்படி. மிக்கி படேல் நேர் எதிரான வகை. 25 ஆண்டுகளாக சிறையில் சித்திரவதைக்குள்ளாகி வந்த நெல்சன் மண்டேலாவை வைத்து விடுதலையின் செய்தியை பத்து பெரிய சுவரொட்டி டிசைன்களில் வெளிப்படுத்தினார். காந்தி, காஸ்ட்ரோ, குவேரா, மார்டின் லூதர் கிங் போன்றோரின் வாசகங்களுடன்அவற்றை அவர் அமைத்தது பார்வையாளனை சட்டெனத் தொற்றிக் கொள்ளும் ஆற்றல் கொண்டிருந்தது. ஈழத்தில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுவதை மிக உக்கிரமாக வெளிப்படுத்தினார் சந்தானம். கொடியில் ஆடும் துணிகளின் மூலமாக, உருக்குலைந்த சன்னல்கள் மூலமாக பிணைக்கப்பட்ட கரங்கள் மூலமாக வதைபடும் ஈழத் தமிழரின் போராட்ட உணர்வையும் விடுதலை தாகத்தையும் உலகுக்கு உணர வைத்தார். அவசர நிலைக் காலத்தின் அக்கிரமங்களை அசோக தூபியிலுள்ள சிங்கத்தின் சீற்றத்தின் மூலம் மிக நுட்பமாகவும் தெளிவாகவும் காட்டினார் விவான் சுந்தரம். போபால் விஷவாயு விபத்து குறித்து பத்திரிகைகளில் வந்த நூற்றுக்கணக்கான கட்டுரைகள் சாதிக்க முடியாததை 'வீக்லி'யில் வந்த ஓவியம் சாதித்துக் காட்டியது. முக்காடிட்டவர்களாய், முகக்களை இழந்தவர்களாய், பித்துப் பிடித்தவர்களாய் உருக்குலைந்தவர்களாய் நிற்கும் மனித உருவங்களை நிறுத்தி அந்த அவலத்தின் பரிமாணங்களை உணருமாறு செய்தார் அந்த ஓவியர்.

எந்த ரூபத்தில் ஓவியம் இருந்தாலும் அது உணர்த்த வேண்டியது பார்வையாளனுக்குப் போய் சேரவேண்டும். ரோமானியக் கலைஞர் ஒருவர் குறிப்பிட்டார்: (பக் 76—77 ''கருங்கடலும் கலைக் கடலும்'' வாசகர்வட்டம், 1974)

''யதார்த்தமாக வரைவது, மனிதர்களை அப்படியே வரைவது—இவை யாவும் சிறை போன்றவை. அப்ஸ்ட்ராக்ட் கலை தான் கலைஞனுக்கு விடுதலை அளிக்கிறது. கிராம மக்களின் கலைகளை ஊன்றிக் கவனித்துப் பார்த்தால் கிராமியக் கலை முழுவதுமே குறியீடுகளையும் ஸ்தூலமான நகலாக இல்லாத உள்மனப் பகுதிகளையும் மலர்ச்சிகளையுமே வெளிப்படுத்தும் மரபைச் சேர்ந்தது என்று தெரியும். கிராமியக் கலைஞர்களின் படைப்புகளைக் கண்டு வியித்து என் கலை நோக்கிற்கே ஒரு புத்துயிர் தேடியிருக்கிறேன்'' □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

□ கவிஞர் ஆப்ரஹாம் ஸுட்ஸ்கேவெர்

□ சென்ற இதழின் தொடர்ச்சி

## கருகிய முத்துக்கள்

குமுறி நடுங்கி
முனகுகின்றன என் சொற்கள்
உடைந்த கரங்கள்போல
மன்றாடுகின்றன, கெஞ்சுகின்றன
சதை கவ்வத் துடிக்கும்
கோரைப் பற்கள் போலத் தம் முனைகளைத்
தீட்டிக் கூராக்குகின்றன
செய்வதறியாமல்.

உலகத்தின் நெருப்பைத் தூண்டும்
எழுதப்பட்ட சொல்லே
உன் கதறல்களால் என் நெஞ்சம்
இனியும் நெகிழ்வதில்லை
மாறாக, அர்த்தமிழந்த சொற்கள் போன்ற
கருகிய முத்துக்கள்
அவற்றின் சிதையிலிருந்து என்னை
உற்றுப் பார்க்கின்றன உணர்ச்சியின்றி.

மரணத்தைப் பற்றிய உணர்வே
மரத்துப் போன என்னால்கூட
எரிதழல் சூழ்ந்த இந்தப் பெண்ணை
அடையாளம் காண முடியவில்லை
அவளது மகிழ்ச்சிகள், உடல், வாழ்க்கை, மூச்சு
ஆகியவற்றிலெல்லாம் எஞ்சியிருப்பன
கருகிய முத்துக்கள்
ஒரு பெயர்கூட அல்ல.

## காலணிகளின் சுமை

வண்டிச் சக்கரங்கள் விரைந்தோடுகின்றன
அதிர்வுகளுடன்
அவற்றில் என்ன சுமை?
நடுங்கும் காலணிகள்.

ஒரு பெரும் நடன அரங்குபோல்
அவ்வண்டி:

ஜோடிகளின் நடனங்களின்போது
நிகழ்வதுபோல்
நசுங்குகின்றன காலணிகள்.

திருமணமா? விருந்து நிகழ்ச்சியா?
என் கண்கள் என்ன அவிந்துவிட்டனவா?
இந்தக் காலணிகளை விட்டுச்சென்றது யார்?
வில்னாவிலிருந்து பெர்லினுக்கு
ஏற்றிச் செல்லப்படும்
காலணிக் குதிகளின் உராய்வுகள்
கிலி தரும் ஓசை எழுப்புகின்றன.

அசையாதிருக்க வேண்டும் நான்;
என் நாக்கு உலர்ந்துவிட்டது
ஆனால், காலணிகளே
உங்களுக்குரிய பாதங்கள் எங்கே?
வெளிப்புறம் பித்தான்கள் கொண்ட
இந்தக் காலணிகளுக்குரிய பாதங்கள் எங்கே?

இதோ இந்தக் காலணிகளுக்குரியஉடல் எங்கே?
இந்தக் காலணிக்குரிய மணமகள்?

இந்தக் காலணிகளில் தன் பாதம் பொருத்தும்
குழந்தை எங்கே?

இந்தக் காலணிகளை வாங்கிய கன்னிப்பெண்
வெறுங்காலுடனா திரிகின்றாள்?

செருப்புகளும் காலணிகளும்,
இதோ என் தாயாருடையவை!
அவள் திருநாளுக்கென வாங்கியவை,
மற்ற காலணிகளுடன் இவையும்.
வில்னாவிலிருந்து பெர்லினுக்கு
ஏற்றிச் செல்லப்படும்
காலணிக் குதிகளின் உராய்வுகள்
கிலி தரும் ஓசை எழுப்புகின்றன. □

★ தமிழில் : எஸ். வி. ராஜதுரை, வ. கீதா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாயா சாயா சாயா சாயா சாயா சாயா
சாயா சாயா சாயா சாயா சாயா சாயா

# சாயா

சாயா சாயா சாயா சாயா சாயா சாயா
சாயா சாயா சாயா சாயா சாயா சாயா

பாவண்ணன்

பார்ப்பதற்குச் சாயா மாதிரிதான் தெரிந்தது. வேறு யாராவது இருக்கக்கூடுமோ என்றும் சந்தேகம். அம்பாரமாய் இளநீர்க் காய்களைக் குவித்து வைத்துக் கொண்டு பின்புறம் மாத்திரம் தெரிய நின்று கொண்டிருந்தவளை சட்டென்று அடையாளம் கண்டுபிடிக்கச் சிரமப்பட்டேன். சுந்தரிக்குக் காட்டியதும் அவளுக்கும் சந்தேகம் தட்டியது. மனசுக்குள் ஒரு மாதிரி ஆவல் உந்த, நிற்கிற பஸ்ஸைவிட்டு இறங்கிக் கிடுகிடுவென்று பக்கத்தில் போய்ப் பார்த்தால், சாயாதான் அவள்.

'அக்கா...'

கையில் இருந்த கத்தியையும், காயையும் போட்டுவிட்டு டக்கென்று நகர்ந்து சுந்தரியின் கையைப் பிடித்துக் கொண்டாள். 'சென்னாகிதீரா சாரு...' என்று என்னைப் பார்த்துக் கேட்டாள். எந்தப் பதிலுக்கும் காத்திராத சந்தோஷம் அப்பிய முகத்துடன் தாவிப் பையனை வாங்கிக் கொண்டாள். அவளின் கன்னடக் கொஞ்சலுக்கு நடுவில் பையன் நெளிந்து சிரித்தான்.

சிரிப்பும் சந்தோஷமுமாகவே தெரிந்தாலும், சாயாவின் மெலிவிலும், கருத்துப்போன தேகத்திலும் சிரத்தையின்றி அள்ளிக் கட்டியிருந்த கொண்டையிலும் அவள் பலவீனமாய்க் குலைந்திருப்பது தெரிந்தது. இரண்டு வருஷத்துக்கு முன்பு ஹோஸ்பெட்டில் ஏழு மாசமோ, எட்டுமாசமோ இருந்துவிட்டு அப்புறம் ஹுப்ளிக்கு மாற்றலாகிப் போனபோது பார்த்த குலைவைக் காட்டிலும் இன்னும் மோசமாகி நலிந்து போய் இருந்தாள். கண்களில் பளபளக்கிற வெளிச்சமும் பெரிய உதடுகளுக்கு நடுவில் பட்டுத்துணி மாதிரி நெளிகிற சிரிப்பும் மட்டும் சாயாவின் சொந்த அடையாளமாய் இருக்க, மற்றபடி யாரோ ஒரு குச்சியான பெண் மாதிரி தெரிந்தாள்.

தெரிந்த முகம், தெரியாத முகம் என்ற வித்தியாசத்தைத் தாண்டி முதல் வார்த்தையிலேயே ஒட்டிப் பிரியமான சுபாவத்தினால் தன்னோடு நேசம் கொள்ள வைத்து விடுகிற குணம் ரொம்பவும் விசித்திரமானது. சொந்த வாழ்வில் எத்தனையோ சங்கடங்களும் வருத்தங்களும் அரித்து அரித்து நிம்மதியை விழுங்கிக் கொண்டிருந்த போதுகூட வேலிப்படலைத் தள்ளுகிற மாதிரி அவற்றையெல்லாம் தள்ளி விட்டு மனிதர்களோடு மடமடவென்று பேசிச் சம்பந்தத்தை உருவாக்குகிற போக்கும் விசித்திரமானது தான். வாழவந்த இடத்தில் படுகிற அவமானத்துக்காகவும் சிரமத்துக்காகவும் பரிதாபப்பட்டு சோகத்தோடும் ஆதுரத்தோடும் பிறர் பேசத் தொடங்கும்போது குறையையும் தாழ்வையும் கேட்டுக்கொண்டிருப்பதில் சங்கடப்பட்டவள் போல் மெல்ல மெல்ல பேச்சின் திசையையே மாற்றிவிடுகிற அவசரமும் எல்லாவற்றைக் காட்டிலும் விசித்திரமானதுதான். நாங்கள் ஹோஸ்பெட்டியில் இருக்கிற காலம் வரைக்கும் தினசரி காலையும் மாலையும் பால் ஊற்றுகிறவளாக இருந்தவள், இந்த பஸ் ஸ்டாண்டில் இளநீர் விற்கிறவளாக நின்று கொண்டிருப்பதும் கூட விசித்திரமாய்தான் இருந்தது.

விசித்திரமான முறையில்தான் சாயாவை முதன் முதலில் நாங்கள் எதிர் கொண்டோம்.

ஹோஸ்பெட் லாட்ஜில் நாலுநாள் தங்கி வாடகைக்கு வீடு பிடித்து, வாங்கி வந்த ஓட்டல் பலகாரங்களைச் சாப்பிட்ட பிறகு பாத்திர மூட்டையைப் பிரித்து அடுக்கிக் கொண்டிருக்கிற சமயத்தில் 'ஈ மனெகே நீவே ஹொஸதாகி பந்திதீரா' என்ற சத்தம். திரும்பிப் பார்த்தால் புதுசாக அடித்த பெயிண்ட் வாசனை மாறாத கதவைப் பிடித்துக் கொண்டு அவள் நின்றிருந்தாள். கேள்வியைத் தொடர்ந்து அந்த முகத்தில் சின்ன சிரிப்பு. மெலிதான கூச்சம். வாசல் தோட்டத்தில் வேப்ப மரமும் புதர் புதராய் கனகாம்பரச் செடிகளும். பலா மரமும் அழகான விரிப்பாய் இருக்க, ஒரு உயரமான கொடி மாதிரி அவள் தோற்றமிருந்தது. கன்னட வார்த்தைகளின் புரியாமை சில கணங்களுக்குத் தாக்கினாலும் முதல் முறையாக ஒரு விருந்தாளியை எதிர்கொள்கிற நேசமான புன்னகையைச் சிந்தித் தலையசைத்தாள் சுந்தரி. 'கன்னடக்காரங்கள்ளாம் எப்படி இருக்காங்களோ" என்று பெங்களூரில் பஸ் ஏறின சமயத்தில் இருந்து தவித்துத் தவித்துப் புலம்பிக்கொண்டே வந்தவளுக்கு வாசலில் இறங்கிய கையோடு ஒரு சிநேகிதம் காத்துக் கிடக்கிறதைக் கண்டதும் உள்ளுக்குள் நிம்மதி புரளச் சிரித்துக் கொண்டேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'வாங்க...'

தமிழிலேயே சுந்தரி சொன்னதும் அறிமுகத்துக்குப் பாஷையெல்லாம் ஒரு பெரிய விஷயமே இல்லை என்கிற மாதிரி ரொம்ப இயல்பாய் உள்ளே வந்தவள் பேச ஆரம்பித்தாள்.

'ஊரு புடிச்சிருக்கா ஒங்களுக்கு. பிரமாதமான ஊரு இங்கு வந்த யாருக்கும் இத உட்டுப் போக மனது வராது. கங்கா ஸ்நானம் துங்கா பானம்னு வசனமே உண்டு. துங்கபத்ரா தண்ணிச்சு அப்பிடி ஒரு ராசி. ஒரு தம்ளர் குடிச்சா போதும் இன்னம் கொண்டா இன்னம் கொண்டான்னு கேக்கும். இந்த ஊட்டுல நீங்க சந்தோஷமா இருக்கலாம். நாங்கள்ளாம் ஒத்தாசயா இருக்கம். இதே தெரு கடைசில எங்க ஊடு. எல்லார்க்கும் நான்தா பாலு ஊத்தறன் அரலிட்டரா ஒரு லிட்டரா சொல்லுங்க, அசல் பாலு நா கொண்டாந்து ஊத்தறன்...'

காசு இறைத்த மாதிரி படபடவென்று கன்னடத்தில் அவள் பேசிக் கொண்டே இருந்தாள். 'அவளுகே ஈ பாஷாகொத்தில்லா' என்று நடுவில் நான் சொன்னதும்தான் நிறுத்தினாள். சட்டென்று நாக்கைக் கடித்துக் கூச்சத்துடன் சிரித்துக் கொண்டாள்.

சார் பேசறீங்களே...'

'நா மூணு வருஷமா கர்நாடகாதா சுத்தறன்'

'இவுங்க'

'இனிமேதா கத்துக்கணும்'

'கவலயே படாதிங்க. ஒரே மாசத்ல நா பேசற பேச்சு அக்காவுக்குத் தானா வந்துரும்'

பாயில் கிடந்த குழந்தையைத் தூக்கி முத்தமிட்டுத் தோள்மீது போட்டபடி நகர்ந்து சுந்தரியின் கையை வாங்கித் தன் கையோடு வைத்துக் கொண்டு ஆதரவோடு சொன்னவளை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சுந்தரியும் அள்ளிச் செருகியிருந்த புடவையை சரிப் படுத்திக் கொண்டு பிளாஸ்க்கில் மிச்சமிருந்த காப்பியை ஊற்றி அவளிடம் நீட்டினாள். 'எனக்கா' என்பதுபோல் ஆச்சரியம் படர நெஞ்சில் கை வைத்து கேட்டு வாங்கிக் குடித்தாள அவள். உணர்த்த முடியாத பரவசமும் நெகிழ்ந்து உருகும் பார்வையுமாய் அமைதியுடன் நின்றிருந்தாள்.

'என்ன பேரு...'

'சாயா'

சாயா புறப்பட்டுப் போய் வெகு நேரத்துக்கு சுந்தரி சொல்லிச் சொல்லிச் சிரித்தாள். அவளைப் பொறுத்தவரைக்கு, சாயா என்பது டவுன் டீக்கடையில் புழங்குகிற ஒரு வார்த்தையாகவே மட்டும் மனசில் பதிந்திருப்பதை உடைத்து 'சாயா'வின் அர்த்தம் நிழல் என்று சொன்னேன. ஏற்கனவே கன்னடத்தில் தேர்ந்திருந்த சொற்ப அறிவின் துணைகொண்டு 'டீ' சாயாவுக்கும், 'நிழல்' சாயாவுக்கும் இருக்கிற உச்சரிப்பு வித்தியாசத்தை எடுத்துச் சொன்னேன். 'பேருக்கேத்த பொண்ணுதான்' என்று சந்தோஷப்பட்டாள் சுந்தரி.

சுந்தரியின் கன்னட வழிகாட்டியாக அடுத்த நாளே மாறிவிட்டாள் சாயா. பால் ஊற்றி முடித்து, மாடு குளிப்பாட்டி, தொழுவம் கழுவி, புல்லை உதறிப் போட்டு, தொட்டியில் தண்ணீரை நிரப்பி விட்டு பத்து பத்தரைக்கு வந்தால் மத்தியான சாப்பாடு வரைக்கும் கூடவே இருந்தாள். சமையலுக்கு ஒத்தாசை செய்து, குழந்தையைக்குளிப்பாட்டுவது, பேசிக்கொண்டே புட்டுக்கு மாவிடிப்பது என்று எல்லா காரியங்களிலும் துணையிருந்தாள். வீட்டில் இருக்கிற பாத்திரங்கள், காய்கறிகளில் தொடங்கி ஒவ்வொன்றுக்கும் சமமான கன்னட வார்த்தைகளைச் சொல்லி தந்தாள். கடை, பஸ் ஸ்டாண்ட், தியேட்டரில் நிகழ்த்த வேண்டிய சம்பாஷணையைச் சமாளிக்கிற விதத்தைத் தெளிவாக்கினாள். நடைவண்டி உருட்டுகிற பையனைப் பலவந்தமாய் இழுத்து விதம் விதமான ஆட்டம் சொல்லித் தந்து கிச்சுமுச்சு மூட்டினாள். சொள் ஒழுக அவன் சிரிக்கும்போது எடுத்து நெற்றியில முத்தமிட்டாள். 'அத்தைக்கு கண் அடி, அத்தைக்கு கண் அடி' என்று அவனைத் தீண்டிவிட்டு, முகத்தை ஒரு தினுசாய்ச் சுருக்கி கண்களை மூடி திறக்கிறதைக் கண்டு அவளும் குழந்தை போல சிரித்தாள்.

தீபாவளி சமயம். நானும் சுந்தரியும் வெளியே போய்விட்டு சாயங்காலம் திரும்பி வாசலைத் திறந்த கையோடு அக்கட' என்று தரையில் உட்கார்ந்த சமயம் சாயா வந்து நின்றாள். முன் தலையில் ஆஸ்பத்திரிக் கட்டு இருந்தது.

'என்னாச்சி சாயா...'

'அடிச்சிட்டாரு.'

வார்த்தைகள் பொங்கிக் கொண்டு வந்தன அவளுக்கு. காலம் காலமாய் அனுப

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வித்து மனசைப் பாரமாக்கிய சுமையையெல்லாம் கொட்டி விடப் போகிற மாதிரி விசும்பல்களோடும் கண்ணீர்ப் பெருக்கோடும் வளர்ந்த கதை, வாழ்ந்த கதையையெல்லாம் சொன்னாள். அகன்று ஜொலிக்கும் அவள் கண்கள் களையிழந்து துக்கத்தில் மிதந்து கிடந்தன. பேச்சைத் தொடர்ந்து சில நிமிஷங்கள் மௌனமாய் இருந்தாள். அப்புறம் என்னைக் கேட்டாள்.

'அக்காள நீங்க அடிக்க மாட்டிங்களா...'

'ம்ஹூம்...'

'எப்பயுமே அடிச்சது கெடையாதா...'

'ம்ஹூம்...'

'திட்டக்கூட மாட்டிங்களா...'

'ம்ஹூம்...'

'கோவமே வராதா...'

'மஹீம்...'

'ரொம்ப குடுத்துவச்சங்க நீங்க...'

'ஆசப்பட்டு கல்யாணம் பண்ணிட்டு அடிச்சிக்னு கெடக்கலாமா சாயா. மனுஷங்கறதுக்கு ஒரு அர்த்தம் வேணாமா'

'நான்லாம் ஆடுமாடுதா இங்க...'

கண்ணீரைத் தேய்த்துத் தேய்த்துத் துடைத்துக் கொண்டு கசப்போடு சொல்லும் போது அவள் கண்கள் இருண்டது. சாயாவின் குணத்துக்கும், பேச்சுக்கும் வாழ்வு அவளைச் சேர்த்திருக்கிற இடத்தை நினைத்துத் துக்கமாயிற்று. நானும் பேசினேன் சுந்தரி எதையோ குடிக்கக் கொடுத்து பேச்சை மாற்றினாள். இது புதுஇல்லை என்றும், வாழ்க்கைப்பட்டு வந்த நாளில் இருந்து நிறைய அனுபவித்தாகி விட்டது என்று கதை கதையாய்ச் சொல்லி விட்டுக் கிளம்பினாள் சாயா.

புதுவருஷப் பிறப்புக்கு இரண்டு நாளோ மூன்று நாளோ இருந்த சமயம் கலர் தாள்களில் கொடி நறுக்கி வாசல் கதவுக்கும் அறைச் ஜன்னலுக்கும் நடுவே குறுக்குக் கயிறு கட்டி ஒட்டிக் கொண்டிருந்தபோது சாயா வந்தாள். வர்ணத்தாள்களைப் பார்த்ததும் அவள் கண்களில் பிரகாசம் ஏறியது. முட்டையும், உருளைக் கிழங்கும் போட்டுப் பிசைந்து பையனுக்கு ஊட்டியபடி சுந்தரி அறைக்காலுக்கு அந்தப்பக்கம் உட்கார்ந்திருக்க இந்தப்பக்கம் உட்கார்ந்தாள் சாயா. வாய் நிறைய சாப்பாட்டை வைத்துக் கொண்டு அவளைப் பார்த்ததும் பழக்க தோஷத்தால் முகம் சுருக்கிக் கண்களை மூடிமூடித் திறந்து அழகு காட்டினான்பையன். அத்தைக்கு கண்ணடிக்கிறயா... வா...வா என்று கைநீட்டி வாங்கித் தானே ஊட்ட ஆரம்பித்தாள். பத்து நிமிடமோ பதினைந்து நிமிடமோ போயிருக்கும் வாசலில் இருந்து 'சாயா' என்று கூப்பிடும் கடூரமான குரல் கேட்டது. வாசல் தடுப்புக்கு அந்தப்பக்கம் நின்றிருந்தான் அவள் புருஷன். கன்னம் உப்பி மயிரெல்லாம் சிலுப்பிக் கிடந்தது. ஒரு முரட்டுக் குதிரை மாதிரி நின்றிருந்தான். குழந்தையைச் சுந்தரியிடம் கொடுத்துவிட்டுத் திரும்புகிற அவகாசத்தைக் கூட சகித்துக் கொள்ள முடியாத மாதிரி சடக்கென்று வாசல் படலைத் தள்ளிக் கொண்டு ஒரே தாவாகத் தாவி வந்து சாயாவை இழுத்தான். ...ஸ்... உடு வரன்' என்று சொல்லிக் கொண்டே கையை விலக்கின சாயாவிடம் 'என்னடி வரன் புரன்னு...' என்று சீறி விழுந்தது அவன் வார்த்தை. சளார் என்று கன்னத்தில் அறைந்தான். தாள்களையெல்லாம் உதறிவிட்டு 'சார் சார்' என்று எழுந்து ஓடினேன் நான். என்னைக் கடுகடுப்போடு பார்த்துவிட்டு மீண்டும் சாயாவின் தோள்மீதும் கன்னங்களிலும் மாறி மாறி அடித்தான், 'ஊடு தங்காதாடி ஒடம்பு, ஊரு மேஞ்சிக்னே இருக்கணுமா' என்று துப்பினான். கன்னடா புருஷன் கசந்துட்டானாடி தமிழ்ப் புருஷன் கேக்குதா' என்று விலாவில் இடித்தான். எனக்குஎரிச்சல் எல்லை மீறியது. நான் அவனை நெருங்கினேன். அவிழ்ந்த கூந்தல் அவன் கைப்பிடியில் இருக்க சோகம் நிறைந்த சாயாவின் கண்கள் என்னைப் பேசாமல் இருக்கும்படி கெஞ்சின. கெஞ்சிக் கெஞ்சி 'மயிர உடுய்யா' என்று கேட்டும்கூட தரதரவென்று அவன் இழுத்தபடியே நடக்க கூடவே போய்விட்டாள் சாயா. அதிர்ச்சியில் உறைந்து கிடந்தோம் நாங்கள்.

மறுநாளே எல்லாவற்றையும் கழுவிவிட்ட மாதிரி சாயா வந்து வாசலில் நின்றாள். குழந்தைக்காக உதறிப்போட்ட போர்வையும், தலையணையையும் பாதி மாத்திரமே இஸ்திரி செய்து மின்சாரம் நின்றதும் அப்படியே கிடந்த துணிக்குவியலையும் நகர்த்தி ஓரமாக்கிவிட்டு ஜன்னலோரம் உட்கார்ந்தாள். கன்னத்திலும் கழுத்திலும் இன்னும் வீங்கி இருந்தது. கைத்தடம் கூட மாறாமல் இருப்பதுபோல தெரிந்தது. 'ஏன் சாயா இப்படி' என்று உட்கார்ந்தபடியே கேட்ட சுந்தரியையும், மூலையில் சிம்மெர்ஷன் ஹீட்டரைப் பிரித்துப் பழுது பார்த்துக் கொண்டிருந்த என்னையும் பார்த்தபடியே சுரத்தில்லாமல் சிரித்தாள். இந்தச் சிரிப்பைத் தொடர்ந்து அவள் சன்னமான குரலில் அழுது விடுவாள் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'நாலு வருஷமாச்சி. கல்யாணமாயி, எப்பவும் இந்தப்பாடுதா. அந்தக் காலத்துல இன்னமோ அரசாங்க வேலைக் கெடச்சிதாம். ஐயாயிரமோ பத்தாயிரமோ கட்டச் சொன்னாங்களாம். இவுங்க ஊட்டுல பணம் தரலயாம். பத்தாயிரத்த அவங்கிட்ட குடுத்துட்டு கைகட்டி நிக்கறதவிட ஊட்டுல பத்துமாடு இருக்குது. புத்தியா பாத்துட்டா மாசம் ஆயிரம் கெடைக்குமன்னாங்களாம். அழகா ஒழுங்கா சட்டைபோட்டுன்னு கௌரவமா இருந்திருப்பனே. இந்த அப்பனால பாழாப் போய்ட்டனேன்னு ஓர் ஆத்திரம். ஓர் ஆங்காரம். அப்பத்தான் இப்பிடி கொணம் மாறிடுச்சாம்'

முழங்காலுக்கு நடுவில் கன்னத்தைக் கொடுத்த நிலையில் முந்தானையால் கண்ணீரைத் துடைத்தபடி இவள் தொடர்ந்து சொன்னாள்.

'கல்யாணம் பண்ணிணா சரியாயிடும்னு நெனச்சி கட்டி வெச்சாங்களாம். தப்புக்குப் பரிகாரம் மாதிரி செஞ்சிட்டாங்க. நடுவுல நான்தா அடுப்புல உழுந்த கோழிக்குஞ்சு மாதிரி கெடந்து சாவறன். மொதல்லயே ஆங்காரம். இந்த லட்சணத்துல நூறு வருஷமா புள்ள இல்லையா அது வேற அசிங்கம். எந்த ஆம்பளைய பார்த்தாலும் இன்னும் கொஞ்சம் ரோஷம் ஏறிக்கும். காலம் பூரா கேவலப்படணும்ன்னு ஆய்ட்டுது...'

சாயாவின் குரல் கேட்டு தோட்டத்தில் ஆடிக் கொண்டிருந்த பையன் மெது மெதுவாக நடந்து வந்து 'அத்த' என்றான். சூழலின் சுமை புரியாமல் காணாததைக் கண்டு விட்ட மாதிரி அரையும் குறையுமாய் முளைத்திருந்த பல்லைக் காட்டிச் சிரித்துக் கண்ணடித்தான். 'ஐயோ என் செல்வமே' என்று வாரிக் கட்டிக் கொண்டாள் சாயா.

அப்புறம் ஒரு மாசமோ இரண்டு மாசமோ தான் ஹோஸ்பெட்டில் இருந்தோம். ஹூப்ளிக்குப் போக வேண்டியிருந்தது. முன் கூட்டிப் போய் வீடு பார்த்து வந்து சாமான்களையெல்லாம் கட்டுக் கொண்டிருந்த போது சாயா வந்தாள். மடி நிறைய சுந்தரிக்குப் பிடித்தமான கனகாம்பரம் பூக்களைக் கட்டிக் எடுத்து வந்தாள். சாயாவின் உபகாரத்தாரத்தால் ஓரளவு கன்னடா பேசக் கற்றுக்கொண்ட சுந்தரி, 'யாக்கே இஷ்டு ஹூவு' என்றபடி சாயா மறுக்க மறுக்க அவளை உட்கார்த்தித் தலை பின்னிப் பாதிப் பூவைச் செருகினாள். ஏற்கனவே எடுத்து வைத்திருந்த இரண்டு நைலக்ஸ் புடவைகளையும், ரவிக்கைத் துணிகளையும் குங்குமத்தோடு தந்தபோது,

'வேணாங்க்கா... வேணாங்க்கா' என்று தயக்கமான குரலிலேயே மறுத்தாள் சாயா. 'அந்த ஆளுக்கு எதுனாச்சிச் சந்தேகம் வந்தாலும் வருங்க்கா' என்று தரையைப் பார்த்தபடி சொன்னாள். 'ஒன்றும் வராது சாயா. கடவுள் ஒன்ன நல்லபடியாக வச்சிருப்பான். ஒன் கூடப் பொறந்தவ குடுத்தா வாங்கிக்க மாட்டியா' என்று அவள் கையைப் பிடித்துக் கொடுத்தாள்.

வண்டியில் ஏறி உட்கார்ந்த நேரம் சாயா ரொம்பவும் கலங்கி விட்டாள். முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டாள். காற்றில் விழுந்த முடியை ஒழுங்கு செய்தபடி என்னிடமிருந்து பையனை வாங்கி மாறிமாறி முத்தம் கொடுத்தாள்.

'எப்பனா ஹோஸ்பெட் வந்தா ஊட்டுப் பக்கம் வரணும் சார். அக்காவயும் புள்ளயயும் கண்டிப்பா கூட்டு வரணும்'

சின்ன கோரிக்கை மாதிரியும், கண்டிப்பாய் நான் அதன்படி செய்ய வேண்டும் என்று எதிர்ப் பார்ப்பவள் மாதிரியும் நிறுத்தி நிறுத்திச் சொன்னாள் சாயா. வண்டி தெரு முனை திரும்பும் வரை அங்கேயே நின்றிருந்து கையசைத்தாள்.

கை மெலிந்து, கண்கள் இருண்டு புழுதி அப்பிய பித்தளைச் செம்புபோல மாறிக் கிடந்தாலும் கூட, அந்தப் பிரியம் பொழிகிற குணமும், பூ அவிழ்கிற மாதிரி இதமான வார்த்தைகளைச் சலிக்காமல் பேசுகிற வீச்சும், முகத்துக்கு ஒரு அற்புதமான தெளிவைக் கூட்டி விடுகிற இளஞ்சிரிப்பும் சாயாவிடம் இன்னும் இருந்தன. சுந்தரியின் கையைப் பிடித்ததைத் தொடர்ந்து நிறைய பேசிக் கொண்டே இருந்தாள். கேட்பதும், விவரம் சொல்வதும் மாறிமாறி நடந்தது. ஒரு ராத்திரியில் மாட்டுக் கொட்டகை தீப்பிடித்துக் கொண்டதாம்; ஒரு மாட்டைக் கூடக் காப்பாற்ற முடியவில்லையாம். பூட்டுப்போட்ட படலுக்கும், முள் நெருங்கக் கட்டிய வேலிக்கும் நடுவில் எல்லாமே செத்துப் போச்சாம். புருஷனே செய்திருக்கக் கூடும் என்று சந்தேகமாம். வயிற்றுப்பாட்டுக்காக இளநீர் வியாபாரமாம் சாயா சொல்லும்போதே நானே நஷ்டப்பட்ட மாதிரி துக்கமும் அதிர்ச்சியுமாய் இருந்தது!

'பொருள்போனா போவுது, இப்பயாவது ஒன் புருஷன் ஒழுங்கா வெச்சிருக்கானா'

'என்ன சொல்றதுக்கா நா பட்ட அடி ஒதைக்கு என்னிக்கோ ஓடிப் போயிருக்கணும் இங்க கொட்டற ஒழப்புக்கு எங்க போனாலும்

www.tamilarangam.net



ராணி மாதிரி வாழலாம். இவ்ளோ காலமா இல்லாம இப்ப வயித்துல வேற ஒன்னு. இதுக் காகவேணும் பல்லக்கடிச்சிக்னு இருக்கணும். மாறனாலும் சரி மாறாட்டாலும் சரி ஆத்தா ஒரு பக்கம் அப்பன் ஒரு பக்கம்னு துண்டு துண்டா கெடக்கறத பாக்க இதும் மனசு இன்னா இம்சப்படுமோ. நம்மால ஒரு புள்ள சந்தோஷமா இருக்குதோ இல்லையோ துக்க மில்லாமலாவது இருக்கணும்ல்ல...'

அப்போதுதான் சிறுசரிவாய் இருந்த அவள் வயிற்றைப் பார்த்த சுந்தரி கண்விரிய வீதி என்று கூடப் பார்க்காமல் சட்டென்று கையில் முத்தமிட்டுத் தலையை ஆதரவாய்த் தன்மீது சாய்த்துக் கொண்டாள். பஸ் வரைக்கும் சின்னக்குரலில் பேசினபடி நடத்தியே அழைத்துப்போய் பையில் இருந்து ஒருடஜன் வாழைப்பழத்தையும், ஏழெட்டு ஆப்பிள் களையும், தார்வாட் பேடா பாக்கெட்டையும் எடுத்து அவளிடம் நீட்டினாள். சாயா மறுக்க மறுக்க 'சீ... அக்கா ஊட்டு சீருடி. பொண்ணே வேணாம்ன்னு சொல்லக்கூடாது' என்றுசெல்ல மாய் அவளது மடிச்சேலையில் வைத்துக் கட்டி னாள். குழந்தை புரளும் வயிற்றில் சுந்தரியின் விரல் தீண்டலில் மிகவும் சிலிர்ப்புற்றவளாய்க் கண்களில் நீர் கசிய நின்றாள் சாயா.

ஹோஸ்பெட் வந்துட்டு ஊட்டுக்கு வராமலியே போறீங்களாக்கா...'

'இல்ல சாயா. அவசரமா மெட்ராஸ் போறம். குண்டக்கல் போய் வண்டிபுடிக்கணும் அதான்...'

'புள்ள பொறந்தப்பறம் வறீங்களாக்கா?

'கண்டிப்பா. எத்தினி மாசம் இது?

'அஞ்சி'

குபுக்கென்று கண் நிறைந்தது சாயாவுக்கு. பார்வை, ஒரு கணத்துக்கு ஜொலித்தது திரும்பிப் பையனின் பக்கம் குனிந்து அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

'என்னடா வளந்துட்டதும் தெரியலியா. அத்தைக்கு கண் அடிப்பியே மறந்துட்டியா இப்ப அடிபாப்பம். அடி... அடி...'

வெட்கமுற்றுக் குனிந்து கொண்டான் பையன்.

'நீயாவது பொண்டாட்டிய அடிக்காம வச்சிக் காப்பாத்து ராஜா...'

கண்டக்டர் விசில் சத்தம் கேட்டு கதவுப் பக்கம் நகர்ந்தோம். விடை கொடுக்கிறது மாதிரி ஜன்னலோரம் சற்று முன்னெட்டி நின்றாள் சாயா, உள்ளே இருக்கையில் உட்கார்ந்த எங்களுக்கு முகம் தெரிகிறபடி.

நான் சுந்தரியின் முகத்தைப் பார்த்தேன், அவள் கண்கள் தளும்புவது தெரிந்தது. இறுதி யாய் பையனைப் பார்த்துச் சொன்ன சாயா வின் வார்த்தை மனசில் ஓடிக்கொண்டிருந்தது.

'போய்ட்டு வரம் சாயா...?

முகத்தை வெளியே துருத்தி பஸ் அடி அடியாய் நகர்ந்து வேகமெடுத்து சாயாவின் உருவத்தை மறைக்கிறவரை கையசைத்துக் கொண்டே இருந்தோம். ப

---

**வாசகர்களுக்கும் படைப்பாளிகளுக்கும்**

## பாலம்

இலக்கிய இதழ் வரிசையில் அதிகமான நல்ல வாசகர்களைக் கொண்டது. தொடர்ந்து உங்களை நாடி வர இருப்பது. இந்தியாவில் மட்டுமல்ல; உலகில் தமிழர்கள் வாழும் 20க்கும் மேற்பட்ட நாடுகளில் அதிகமாக விற்பனையாகக் கூடிய இலக்கிய இதழ்.

விளம்பரங்களை வரவேற்கிறோம். படைப்புக்களை எதிர்நோக்குகிறோம்.

**பாலம், 12 முதல்பிரதான சாலை, நேருநகர், சென்னை-20**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## காசி பற்றி சில கவிதைகள்

### காசி 1

உன்னுடைய வெறிச் சோடிய
பார்வை இந்த நகரின் ஆன்மாவை
எனக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது
மங்கலான மறதி-நிறைந்த, ஈர
நசநசப்புடன், சளி-நிறைந்த
மூக்கினால் பேசப் படுகின்ற சத்தங்கள்
இரவில் எங்கும் ஒலிக்கின்றன.
என் அமைதியைக் குலைக்கின்றன.
இருள் நிறைந்த பொந்துகளில்
நிர்வாண சாமியார்கள்
கடன் வாங்கப் பட்ட பெண்களைப்
புணர்ந்து பணத்தை அபிஷேகம்
செய்கிறார்கள்.
புதைந்து கிடந்த வித்துக்களைத்
தூவுகிறார்கள்; துரிதமான
ஆனந்த லோகப் பயணத்தின் போது!
படகுகள் கங்கை மீது ஆடி விழுகின்றன—
ஆண்களையும், பெண்களையும் மீளாத
வேசித்தனத்தில் ஆழ்த்தி விட்டு!

### காசி 2

வாரணாசி நகர்
இரவில் மிகவும் புனிதமாகத் தோன்றுகிறது.
புணர்கின்ற தெருநாய்களின் கூச்சல்—
புரோகிதர்களின் கரகரத்த
முணுமுணுப்புடன் போட்டியிடும்
எங்கும் ஒரே சப்தம்
''நானும் ஒரு கடவுள் இல்லை''
என்றால் யாரும் நம்ப மாட்டார்கள்.
தேவனின் கிருபை கிடைக்காவிடினும்
பரவாயில்லை—
என் அமைதியும் கெட்டது இங்கே!

### காசி 3

எலும்புகளும், வளைவுகள் நிறைந்த
சதைக் கூடுகளும்
அழகென்று நான் ரசித்து மகிழ்ந்த
அணைத்து உடல்களும்
புழுக்கள் குடைந்த பிண்டங்களாய்
உண்மையின் கோர வடிவத்தைக் காட்டி
கங்கையின் மார்புகளைச் சுவைத்தபடி
மிதக்கின்றன - மிதக்கின்றன - மிதக்கின்றன
வெள்ளைத் துணி போர்த்தி!
வெறுமையின் எல்லையை நோக்கி!

—ராமகிருஷ்ண சிங் (ஆங்கிலம்)

தமிழில் : காதம்பரி

www.tamilarangam.net

## லிதுவேனிய பொருளாதாரம்

"லிதுவேனிய குடியரசு சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து போக வேண்டுமென்று பெருங்குரல் எழுப்பி வருகிறது. லிதுவேனியக் குடியரசிற்கும், மற்ற சோவியத் யூனியனிலுள்ள பகுதிகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளைப் பார்க்கும் பொழுது லிதுவேனியா பலவீனமான நிலைமையில் உள்ளது என்று சோவியத் அரசின் புள்ளி விவர அமைப்பு தெரிவிக்கிறது. லிதுவேனியா இறக்குமதி செய்யும் மூலப் பொருள்கள் மற்றும் பண்டங்களின் மதிப்பு ஏற்றுமதி செய்யும் மூலப் பொருள்கள் மற்றும் பண்டங்களின் மதிப்பை விட பல கோடி ரூபிள் அதிகமாக உள்ளது.

லிதுவேனியா 750 கோடி ரூபிள் மதிப்புள்ள மூலப் பொருள்களையும், பண்டங்களையும் சோவியத் யூனியனிலுள்ள இதர பகுதிகளிலிருந்தும் வெளி நாட்டிலிருந்தும் இறக்குமதி செய்கிறது. ஆனால் ஏற்றுமதி செய்யும் பொருள்களின் மதிப்பு 600 கோடி ரூபிள் தான். இதில் 150 கோடி ரூபிள் துண்டு விழுகிறது.

லிதுவேனியக் குடியரசு சுதந்திர நாடாக உலகச் சந்தைக்கு வருமானால் தனது தேசிய வருமானத்தில் அது பத்தில் ஒருபகுதியை இழக்கக்கூடும். ஏனெனில் அது மற்ற சோவியத் குடியரசுகளிடமிருந்து, உலகச் சந்தையில் நிலவும் விலையில் பண்டங்களையும் மூலப் பொருள்களையும் வாங்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

லிதுவேனியா பிரிந்து போக எண்ணினால் அதன் பொருளாதார வளர்ச்சிக்கு மைய அரசு வழங்கிய முதலீட்டை அது திரும்ப அளிக்க வேண்டிய நிலை உருவாகும். இப்படி அளிக்கப்பட வேண்டிய தொகையின் அளவு 18,000 முதல் 21, 000 மில்லியன் ரூபிளாக இருக்கும்.

மேற்கு நாடுகள் அளிக்கும் கடனுதவி, மேலை நாடுகளுடன் கூட்டுத் தொழில் நிறுவனங்கள், குடியரசில் திட்டமிடப்பட்டுள்ள உற்பத்தித் துறையிலான மாறுதல்கள் ஆகியவை பற்றி சரியான புள்ளி விவரங்கள் கிடைக்கப் பெற்றால், லிதுவேனியக் குடியரசு பிரிந்து போவதால், அக்குடியரசில் ஏற்படக்கூடியப் பொருளாதார விளைவுகளை துல்லியமாக எடுத்துக் கூற முடியும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

**நன்றி : சோவியத் யூனியன் செய்திகளும் கருத்துக்களும். மார்ச் 31,1990**

**மேதினிக்கு ஒளி செய்**

மனிதரில் நீயும்ஓர் மனிதன்; மண்ணன்று
இமை திற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்துச் சுடர்முகம் தூக்கு!
மீசை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக்கு ஒளிசெய்!
நகைப்பை முழக்கு நடத்து லோகத்தை!
உன்வீடு—உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து மேலே
ஏறு! வானை இடிக்கும் மலைமேல்
ஏறு விடாமல் ஏறு மேன்மேல் !
ஏறி நின்று பாரடா எங்கும்;
எங்கும் பாரடா இப்புவி மக்களை
பாரடா உனது மானிடப் பரப்பை !
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம் !
'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்தது மகிழ்ச்சி
அறிவை விரிவுசெய்! அகண்டமாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை !
அணைத்துக்கொள் உன்னைச் சங்கமம் ஆக்கு.
மானிட சமுத்திரம் நான் என்று கூவு
பிரிவிலை எங்கும் பேதமில்லை
உகலம் உண்ணஉண்! உடுத்த உடுப்பாய்!

**—பாரதிதாசன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாரதிதாசனாரின் வாழ்க்கை வரலாறு

□

**இல்வாழ்க்கை**

1920 ஆம் ஆண்டில் பாவேந்தர் பழனியம்மையை மணந்தார். 1921இல் தலைமகளாய் சரசுவதி, பிறந்தார். 1928இல் மன்னர்மன்னன் என்ற பெயரால் இன்று நாம் அறிந்துள்ள கோபதி பிறந்தார். 1931இல் வசந்தாவும் 1933இல் ரமணியும் பிறந்தனர். இவர்களில் ரமணி 1970இல் இயற்கை எய்தினார். ஏனையோர் யாவரும் நம்மிடையே வாழ்ந்து வருகின்றனர்.

மன்னர் மன்னன் தமது தந்தையாரின் வாழ்க்கை வரலாற்றை **கறுப்புக்குயிலின் நெருப்புக் குரல்** என்னும் பெயரில் பெருநூலாய் எழுதியுள்ளார். ஏராளமான தகவல்களும் விவரங்களும் அடங்கியது இந்நூல். இவரே பாவேந்தர் பற்றி வேறு சில நூல்களும் எழுதியுள்ளார்.

**தெய்வபக்தியும் தேசப்பற்றும்**

இன்று பாரதிதாசன் என்றாலே தன்மான இயக்கமும் கடவுள் மறுப்பும் தமிழ்த்தேசியமும் நினைவுக்கு வரும். ஆனால் ஆரம்பத்தில் அவர் அப்படி இருக்கவில்லை. கடவுள் பக்தராய் இருந்தார். மயிலம் சுப்பிரமணியரைப் போற்றி **சுப்ரமணியர் துதியமுது** படைத்தார்.

பாவேந்தரின் பக்திப் பாடல்களைப் படித்த பலர் அவரைப் பெரிய மகான் எனக் கருதி தரிசிக்க வந்தார்களாம். கையில் பீடி வைத்துக்கொண்டு கிறாப்புத் தலையோடு காட்சிதரும் கவிஞரைக் கண்டு ஏமாற்ற மடைந்தார்களாம்.

வ. உ. சிதம்பரனாரின் விடுதலை ஆர்வம் பாவேந்தரிடம் நாட்டுப்பற்றை மூட்டியது எனலாம். பாரதியார், வ. வே. சு. ஐயர், டாக்டர் வரதராசலு, அரவிந்தர் போன்றோருடன் பழகியது அவரது நாட்டுப்பற்று வளர்ந்து செழிக்கத் துணையாயிற்று. விடுதலைப் போராளிகளுக்குப் புகலிடம் தருவது, பெற்றோர்க்குத் தெரியாமல் மேல் துண்டில் சோறு கட்டி வந்து கொடுப்பது, செலவுக்குப் பணம் தருவது, தலைமறைவாய்த் தங்க வைப்பது இவை முதல் பாரதியாரின் **இந்தியா** ஏட்டை மறைமுகமாய்ப் பதிப்பிப்பது உட்பட பாவேந்தர் பல வழியிலும் செயல் பட்டார்.

இந்தப் பணிகளுக்கெல்லாம் மகுடமாய்த் திகழ்வது பாவேந்தரின் எழுத்துப் பணி. புதுவை ஏடுகளிலும் தமிழக ஏடுகளிலும் பாடல், கட்டுரை, கதை, மடல் என்று பல வடிவங்களில் அவர் ஏராளமாய் எழுதினார். தேச சேவகன், துய்ப்வேக்சு, கலைமகள் (புதுவை), தேசோபகாரி, தேசபக்தன், ஆனந்த போதினி முதலான இதழ்களில் கே. எஸ். ஆர்., கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், கே. எஸ். பாரதிதாசன் முதலான புனைப் பெயர்களில் எழுதினார்.

இந்தப் படைப்புகளில் — முக்கியமாய்ப் பாடல்களில்—பாவேந்தர் பாரதத் தாயைப் போற்றி வணங்குவதும், ''சேர்வீர் தொண்டர் படைக்கெல்லோரும் அரை நொடியில்'' என்று சங்கொலிப்பதும், பராசக்திக்கும் காளிக்கும் விண்ணப்பம் செய்வதும், சிட்டுக்குருவியை விளித்துப் பாடுவதும், காங்கிரஸ் கட்சியை உயர்த்திச் சொல்வதும், சுதந்திர தேவியைத் துதிப்பதும், 'காந்தி மகாத்துமாவைப்' புகழ்வதும் லாலா லஜபதிராயின் வீரத்தை வணங்குவதும்—இப்படி நிறைய சொல்லலாம் — எழுதியவர் யார்? பாரதியாரா? பாரதிதாசனா? என்ற மயக்கத்தை உண்டாக்கவே செய்கின்றன.

மதுவிலக்குப் பாட்டும்கூட பாவேந்தர் பாடியுள்ளார்:

**மதுவிலக்கு மதுவிலக்கு மனைவிமக்கள்**
**வாழியே!**
**மதிகலக்கும் மதுவை விட்டு மகிழ்வு**
**பெற்று வாழ்குவாய்!**
**நிதியனைத்தும் வீணிலாக்கும் நிலைமை**
**கண்டு நீங்குவாய்!**
**நிதமிழுத்து நலியவைக்கும் நேசர்**
**கையிலேங்குவாய்!**

இறைப்பற்றும் இந்திய தேசியமும் பாவேந்தரின் தொடக்க காலத்துக்குரியவை; பிற் காலத்தில் கடவுள் மறுப்பும் ஏதோ ஒரு வடிவில் தமிழ்த் தேசியமும் இவற்றின் இடத்துக்கு வந்தன. ஆனால் தொடக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலப் பாவேந்தரையும் பிற்காலப் பாவேந்தரையும் இணைக்கும் இழையாகத் திகழ்வது சாதியத்துக்கு அவர் காட்டிய எதிர்ப்பு. இந்த சாதிய எதிர்ப்புதான் பாவேந்தரை இறுதிவரை பாரதியாரிடம் மாறாப் பற்றுடையவராக்கிற்று எனத் தோன்றுகிறது. இவ்வகையில் குறிப்பிடத்தக்கது "தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு." பாவேந்தர் முழங்கும் சமத்துவ முழக்கம் கேட்போம்:

**உறுதி! உறுதி! உறுதி!**
**ஒன்றே சமூகம் என் றெண்ணார்க்கே இறுதி!**
**தேசத்தினர்கள் ஓர் தாய் தந்திரு சேய்கள் இதனைத்**
**தெளியா மக்கள் பிறரை நத்தும் நாய்கள் — மிகவும்**
**நேசத்தாலே நாமெல்லாரும் ஒன்றாய் நின்றால்**
**நிறைய வாழ்வடைவோம் சலியா வயிரக் குன்றாய்!**

**தமிழ்ப் புலமை**

பாவேந்தரின் தமிழ்ப்புலமை பற்றிப் பேசுவதும் மல்லிகையின் நறுமணம் பற்றிப் பேசுவதும் ஒன்றுதான். அப்படியிருந்தும் அவரது தமிழ்ப் புலமைக்கு சவால் விடுத்தவர்களுக்கு அவர் அளித்த பதில்கள் சுவையானவை என்பதோடு, அவரது புலமையின் ஆழத்தை அறியவும் உதவக்கூடியவை. பதமறிய ஒரு பருக்கை:

**" தெள்ளும் தமிழில் இசைத் தேனைப் பிழிந்தெடுத்துத்**
**தின்னும் தமிழ் மறவர் யாம் யாம் யம் பகையே"**

என்று பாவேந்தர் பாடினார். திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் ஒருமுறை இப்பாடலில் குற்றங்காண முற்பட்டு, "தேனைத் தின்னுவதா? எப்படி முடியும்? சிறு பிள்ளைகளும் இப்படி எழுதுவரா?" என்று கேட்டுவிட்டார். இதற்கு பாவேந்தர் அளித்த பதில்:

ஆப்பத்தில் தேங்காய்ப் பாலைப் பிழிந்து எடுத்துத் தின்பதென்றால், பாலைத் தின்பது என்று எந்தப் பிள்ளை யாவது பொருள் கொள்வானா?

உப்புமாவில் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து எடுத்துத் தின்றேன் என்றால், எலுமிச்சம் பழச்சாற்றைத் தின்றதாகப் பொருளா? தின்னப்படுவது தமிழன்றோ?

தெள்ளும் தமிழ் என்பதற்கு அறிவு பயக்கும் தமிழ் என்பது பொருள். தெள்ளல், தெரிதல் என்பது பிங்கலந்தை. தமிழ்ப் பண்ணியம் என்னாது தமிழ் என்று மட்டும் கூறியது செய்யுளணி!

"தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் ஏந்த" என்ற கம்பர் செய்யுளில் தண்டலை (சோலை) என்பதைத் தண்டலையாகிய ஆடரங்கம் என்று பொருள் கொண்டது காண்க.

"மலர்மிசை ஏகினான்" என்பதற்குப் பரிமேலழகர் உள்ளமாகிய மலர் என்று பொருள் கூறியதும் நோக்கத்தக்கது.

பிழிதல்—வார்த்தல், "பிழிநறைக் கற்பகம் மலர்ந்த" என்று குமரகுருபரர், பிள்ளைத் தமிழில் கூறுகிறார். பிழி என்பது ஊற்றுதல், வார்த்தல் என்று பொருள்படுதல் காண்க. நறை—தேன்.

மறவர் - திறனுடையவர், வெல்லுபவர், வீரர்! "மருகூர் மருங்கின் மறங் கொள்வீர்" என்ற சிலப்பதிகார அடியில் மறம் என்பதற்கு திறல் என்று பொருள் கூறினார் அடியார்க்கு நல்லார். மறவர் வீரர், திறனுடையார். மறவர் போர் வீரர் என்பது பிங்கலந்தை.

இனி, தின்னும் என்ற சொற்குறிப்பால், தின்னப்படுவது தேனல்ல, தமிழாகிய பண்ணியம் என்று உணராவிடத்து படித்தார்க்குப் படிப்பாலாகிய பயன் யாது?

கம்பரால் "மருதல் வீற்றிருக்கும்" என்ற இடத்து மருத நிலமானது பெருமையுடன் உட்கார்ந்திருக்கும் என்றா பொருள் கொள்வது? வீற்றிருக்கும் என்ற சொற்குறிப்பால் மருதம் என்பதை மருதமாகிய அரசன் என்று பொருள் கொள்ள வேண்டாமோ?

இனி, "தேனைப் பிழிந்து" என்னாமல் "தேனை வார்த்து" என்று சொல்லியிருக்கலாகாதா எனில், கூறுகிறேன். தேனைக் குறித்துப் பேசுங்கால் பிழிந்து என்று சொல்வதால் இன்றியமையாதது என்க. பிழியப்படுவது தேன் ஆதலின்! தேனுக்குப் பிழி என்றே ஒரு பெயர் உண்டு.

"தேம்பிழி மகர யாழ்"—கம்பர்!
பிழி—தேன்.

மறவர் என்னாது, தமிழ் மறவர் என்றுகுறித்ததுஏன் எனில், தமிழ் மறவர் என்று இனம் விலக்காவிடில் ஆரிய மறவர்களைக் குறிக்குமல்லவா? ஆரிய மறவரின்

www.tamilarangam.net



செயலைத் தமிழர் அறச் செயல் என்று கொள்ளார். வாலியை மறைந்திருந்து கொன்ற செயலை ஆரியர் அறம் என்பர். தமிழர் அதை நரித்தன்மை என்று இகழ்வர்.

**சுயமரியாதை இயக்கம்**

நீதிக் கட்சி எனப்பட்ட தென்னிந்திய நல வுரிமைச் சங்கத்தை எதிர்த்து தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனார் பொறுப்பில் இயங்கி வந்த சென்னை இராச தானிகள் சங்கத்திலிருந்துதான் பெரியாரின் அரசியல் வாழ்வு தொடங்கிற்று (1917).

தேசிய இயக்கத்தின் வீச்சு காரணமாய் வெகு விரைவில் காங்கிரஸ் கட்சியில் பெரியார் 1923 இல் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவரானார். பெரியார் காங்கிரஸ் கட்சி நடத்திய இயக்கங்களில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட போதிலும், தமது வகுப்புரிமைக் கோரிக்கையை காங்கிரஸ் மாநாடுகள் தொடர்ந்து நிராகரித்து வந்தது குறித்து வருத்தமுற்றார்.

1924 இல் பெரியார் முன்னின்று நடத்திய வைக்கம் போராட்டத்தை தேசிய ஏடுகள் பெரும்பாலும் இருட்டடிப்பு செய்த தும் அவரது தொண்டுள்ளத்தில் வேல் பாய்ச்சுவதாய் இருந்தது.

1925 இல் சேரன்மாதேவியில் வ. வே .சு. அய்யர் நடத்தி வந்த குருகுலத்தில் பிராமண மாணவர்களுக்கும் பிராமணரல்லாத மாணவர் களுக்கும் உணவும் நீரும் தனித்தனியே பிரித்து வழங்கப்பட்டதும் காந்தியாரும் காங்கிரஸ் தலைமையும் தலையிட்டு இதனைத் தடுக்கத் தவறியதும் பெரியாரைக் கோபம் கொள்ளச் செய்தன. பார்ப்பனர் நலன் காக்கும் கூடாரமே காங்கிரஸ் என்று அவர் கருதலானார்.

காஞ்சிபுரத்தில் 1925 நவம்பர் 22 ஆம் நாள் நடைபெற்ற தமிழ்நாடு மாகாணக் காங்கிரஸ் மாநாட்டில் பெரியார் முன் மொழிந்த வகுப்புரிமைத் தீர்மானம் நிராகரிக் கப்பட்டது. ''காங்கிரசை ஒழித்துவிட்டுத் தான் மறு வேலை'' என்று சூளுரைத்து, காங்கிரசை விட்டு வெளியேறினார் பெரியார்.

'பார்ப்பன ஆதிக்கத்திலுள்ள' காங்கிரஸ் கட்சியை எதிர்ப்பது, சாதி சமய வேற்றுமை களை எதிர்ப்பது, மூட நம்பிக்கைகளை ஒழித்து, சமதர்மம் மலரச் செய்வது என்ப வற்றைக் குறிக்கோள்களாக அறிவித்து பெரியார் 1925-26இல் சுயமரியாதை இயக்கத்தை நிறுவினார். சுய மரியாதை இயக்கத்தின் தொடக்க காலத்தில் பெரியா ருக்குத் துணை நின்றவர்களில் ஒருவர் தோழர் ஜீவானந்தம்.

தேசிய இயக்கத்தை ஆதரித்து வந்த பாவேந்தர் தமிழ்நாடு காங்கிரசின் விரிந்த நிகழ்ச்சிப் போக்குகளையும், பெரியாரின் முயற்சிகளையும் அக்கறையோடு கவனித்து வந்தார். சுயமரியாதை இயக்கமும் அதன் கொள்கைகளும் அவரைக் கவர்ந்தன. 1928 இல் அவர் அவ்வியக்கத்தில் சேர்ந்தார்.

சுயமரியாதை இயக்கத்தின் தலையேடா கிய குடி அரசிலும் ஏனைய பல ஏடுகளிலும் பாவேந்தர் கவிதைகளும் கட்டுரைகளும் வரைந்தார்.

பெரியாருக்குப் பாமாலை சூட்டுகிறார் பாவேந்தர் (குடி அரசு, 1929 பிப்ரவரி 10):

சுய மரியாதைப் பெயர்கொள் பயிர் செழிக்கத்
தொண்டுசெய்யும் இராமசாமித்தலைவர்!
புயத்தெதிரே புவிபெயர்ந்து வரும் போதும்
புலன் அஞ்சாத் தன்மையுள்ள கர்மவீரா!
செயற்கரிய செயப்பிறந்த பெரியோய்! இந்தச்
செகத்துநிலை நன்கறிந்த அறிவு மிக்கோய்
வியப்புறுநின் இயக்கமது நன்றே வெல்க!
மேன்மை யெல்லாம் நீ எய்தி வாழ்க
நன்றே!

இதே கவிதையில் பார்ப்பன ஆதிக்கம் என்ற பெரியார் கருத்தைப் பாவேந்தர் பிரதிபலிக்கிறார்:

**பாரதத்தின் இன்றைய நிலை என்னவென்று**
**பார்க்குங்கால் எவ்விடத்தும் எதிலும்**
**நன்கும்**
**வேர்விடுத்துப் பார்ப்பனரின் ஆதிக்கந்தான்**
**மிகச் செழிப்பாய் இருப்பதனைக்**
**காணுகின்றோம்.**

1933 டிசம்பர் 31 ஆம் நாள் சென்னை ஒயிட்ஸ் நினைவுக் கட்டடத்தில் சிங்காரவேலர் தலைமையில் நாத்திகர் மாநாடு நடை பெற்றது. இம்மாநாட்டில் கலந்து கொண்ட பாவேந்தர் வருகைப் பதிவேட்டில் ''நான் ஒரு நிரந்தரமான நாத்திகன்'' என்று எழுதி ஒப்பமிட்டார்.

**நீதிக் கட்சி—திராவிடர் கழகம்**

சர். பி. தியாகராயர், டாக்டர் டி. எம். நாயர் போன்றவர்கள் 1916இல் 'தென் னிந்திய நலவுரிமைச் சங்கம்' அமைத்தார்கள்.

www.tamilarangam.net



இவர்கள் நடத்தி வந்த ஆங்கில ஏடு Justice (நீதி). இதுவே நாளாவட்டத்தில் இயக்கத்தின் பெயருமாயிற்று.

1932 இல் பெரியார் சோவியத்து ஒன்றியத்தில் 3 மாத சுற்றுப்பயணம் செய்து திரும்பினார். அதன் பிறகு தீவிரமாகப் பொதுவுடைமைக் கருத்துக்களைப் பரப்பலானார். சிங்காரவேலர், ஜீவானந்தம் ஆகியோரோடு சேர்ந்து சுயமரியாதை சமதர்மத் திட்டம் என்கிற புரட்சித் திட்டத்தை வகுத்து வெளியிட்டார். இதுதான் ஈரோட்டுத் திட்டம் எனப்படுவது.

ஈரோட்டுத் திட்டமும் பெரியார் அதனைத் தீவிரமாய்ப் பரப்பியதும் பிரித்தானிய அரசை அச்சங்கொள்ளச் செய்தன. 1933 டிசம்பர் 30 ஆம் நாள் பெரியார் கைது செய்யப்பட்டார். கம்யூனிஸ்டுக் கட்சியைத் தடை செய்தது போல் சுயமரியாதை இயக்கத்தையும் தடை செய்வது பற்றி ஆட்சியாளர்கள் ஆலோசித்தார்கள். 1935 ஆம் ஆண்டு திருத்துறைப் பூண்டியில் நடைபெற்ற 5ஆவது சுயமரியாதை மாநாட்டில் ஈரோட்டுத் திட்டம் கைவிடப்பட்டது. ஜீவாவும் சிங்காரவேலரும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெரியாரை விட்டுப் பிரிந்தார்கள்.

1938 இல் பெரியார் நீதிக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முன்னுக்குப் பின் முரணின்றி பிரித்தானிய அரசை ஆதரித்து வந்ததாகையால் நீதிக்கட்சி மக்களின் கடும் வெறுப்புக்கு ஆளாகியிருந்தது. எனவேதான் 1944இல் நீதிக் கட்சி திராவிடர் கழகமாக மாற்றப்பட்டது. ஆங்கிலேயர் தமது விசுவாசிகளுக்கு வழங்கிய சர், திவான் பகதூர், கான் பகதூர் போன்ற பட்டங்களைத் தலைவர்கள் துறந்து விடவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிப் போக்குகள் யாவற்றிலும் பாவேந்தர், பெரியார் வழி நடந்தார். 1937 இல் சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று, ராஜாஜி தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்றது. பொறுப்பேற்ற கையோடு இந்தி மொழியைப் பாடசாலைகளில் கட்டாயப் பாடமாக்கிற்று. கொதிப்புற்றார் பெரியார். கிளர்ச்சிக்கு அறை கூவல் விடுத்தார். இந்தித் திணிப்பை எதிர்த்து மறியல் போராட்டம் நடைபெற்றது. போராட்ட வீரர்களுக்கு எழுச்சியூட்டின பாவேந்தர் பாடல்கள் :

**இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்—நாங்கள்**
**எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!**

**செந்தமிழுக்குத் தீமை வந்த பின்னும்—இந்தத்**
**தேகம் இருந்தொரு லாபமுண்டோ?**

மறியல் போரில், 1269 பேர் சிறைப்பட்டனர். சிறைப்பட்டவர்களில் இருவர்—தாளமுத்து, நடராசன் — சிறைச்சாலையிலேயே உயிரிழந்தனர். ''இந்தி எதிர்ப்புப் படை'' ஒன்று திருச்சியிலிருந்து சென்னைக்கு நடைப்பயணம் சென்றது. 1938 டிசம்பர் 6ஆம் நாள் பெரியாரைக் கைது செய்து பெல்லாரி சிறையில் அடைத்தனர்.

பாவேந்தர் பாடுகிறார் :

மாங்குயில் கூவிடும் பூங்சோலை—எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை

இந்த இந்தி எதிர்ப்பு கிளர்ச்சியின் போதுதான் ''தமிழ்நாடு தமிழருக்கே!'' என்ற முழக்கத்தைப் பெரியார் எழுப்பினார், 1939 மே மாதத்தில் சிறை மீண்டு வந்த பிறகு ''திராவிட நாடு திராவிடருக்கே'' என்கிறார்.

இந்த முழக்கங்களைப் பாவேந்தர் கவிதைகளாக எதிரொலித்தார்:

**''அறிவுள்ள திராவிடர் நாட்டில்— சற்றும்**
**ஆண்மையில்லாதவர் வந்து**
**நமர் பசி கொள்ள நம் சோற்றை—உண்ண**
**நாக்கைக் குழைப்பதுணர்ந்தோம்**
**உயர்வென்று கொட்டு முரசே!**
**தமிழ்நாடு தமிழருக்கென்றே—இந்தச்**
**சகத்தில் முழக்கிடு முரசே!''**

தமிழாசிரியராகப் பணியாற்றிக் கொண்டேதான் முதலில் சுயமரியாதை இயக்கத்திலும், பிறகு திராவிடர் இயக்கத்திலும் பாரதிதாசன் இவ்வளவு பங்களிப்பு செய்தார் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

### இலக்கியப் பணி

அரசியல் ஈடுபாடு காரணமாய் பாவேந்தரின் இலக்கியப் பணி சற்றும் களைத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பாவேந்தர் எழுதிய **சிறுவர் சிறுமியர் தேசியகீதம், தொண்டர் படைப்பாட்டு, கதர் இராட்டினப் பாட்டு** ஆகிய பாடல்கள் 1930 இல் நூலாய் வெளி வந்தன. அதே ஆண்டில் **சஞ்சீவிபர்வதத்தின், சாரல், தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு** ஆகியவற்றை ம. நோயேல் என்பார் நூல்களாக்கி வெளியிட்டார். 10 பாடல்களைக் கொண்ட **சுயமரியாதைச் சுடர்** என்னும் நூல் 1931இல் வெளியாயிற்று. இந்நூலை குத்தூசி குருசாமிக்குப் படையல்

www.tamilarangam.net



செய்தார் பாவேந்தர். அதே ஆண்டில் பள்ளி ஆண்டு விழாவிற்காக சிந்தாமணி என்ற நாடகத்தை எழுதி, இயக்கினார்.

1930 டிசம்பர் 10ஆம் நாள் **புதுவை முரசு** வார ஏட்டின் ஆசிரியராகப் பாவேந்தர் பொறுப்பேற்றார்.

பாவேந்தர் எழுதிய **இரணியன் அல்லது இணையற்ற வீரன்** என்னும் நாடகம் சென்னையில் 9. 9. 1934இல் பெரியார் தலைமையில் அரங்கேறிற்று. இந்நாடகத்தில் இரணியனாக நடித்தவர் குத்தூசி குருசாமி.

**சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்** என்கிற அமைப்பை நிறுவி, அதே பெயரில் இதழும் வெளியிட பாரதியார் எண்ணியிருந்தார். ஈடேறாமற் போன அவரெண்ணம் பாரதிதாசனால் ஈடேறிற்று. பாரதிதாசனை ஆசிரியராகக் கொண்டு **ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்** என்னும் 'மாதாந்தரக் கவிதைப் பத்திரிகை' 1935இல் வெளிவந்தது. இந்தியாவிலேயே இதுதான் முதல் பாட்டேடு எனப்படுகிறது. ஏழு இதழ்கள் வெளிவந்த பின் நின்றுபோன இந்தக் கவிதை ஏட்டில் இடம்பெற்ற மொத்தக் கவிதைகள் 225 என்றால், பாதிக்கு மேற்பட்டவை பாவேந்தர் எழுதியவை. தேசிய விநாயகர், சுத்தானந்த பாரதியார், சாமி சிதம்பரனார் போன்றோரின் படைப்புகளும் இடம்பெற்றன. சுயமரியாதை இயக்கத்தவரான பாவேந்தர் தமக்கு மாறுபட்ட கருத்துடையவர்களின் படைப்புகளுக்கும் தமது ஏட்டில் இடமளித்தது கவனிக்கத்தக்கது.

1937இல் பாவேந்தரின் **புரட்சிக் கவி** எனும் குறுங்காவியம் வெளியிடப்பட்டது.

1938இல் தான் **பாரதிதாசன் கவிதைகள்** முதல் தொகுதி வெளியிடப்பட்டது. குருசாமியும் குஞ்சிதம் குருசாமியுமே இதற்குப் பெருந் தூண்டுதலாய் விளங்கினார்கள். **பாரதிதாசன் கவிதைகள்** தமிழ்நாட்டிற்கு ஒரு சிறந்த பொக்கிஷம் என்று மதிப்புரை வழங்கினார் பெரியார். ''முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் ஒரு முழுமதி போல'' தமிழ்நாட்டில் பாரதிதாசன் கவிதை தோன்றியுள்ளது என்றார் அண்ணா.

**இரணியன் அல்லது இணையற்ற வீரன்** நாடகம் அரங்கேறியது பற்றி முனபே பார்த்தோம். இந்நாடகம் 1939 இல் நூல் வடிவம் பெற்றது. **எதிர்பாராத முத்தம்** எனும் காவியம் 1941 இல் வெளிவந்தது, **குடும்ப விளக்கு—முதல் பாகம்** 1942 இலும், **பாண்டியன் பரிசு** 1943இலும் வெளிவந்தன 1944 இல் **இருண்ட வீடு, காதல் நினைவுகள், நல்ல தீர்ப்பு (நாடகம்), அழகின் சிரிப்பு** ஆகிய நூல்கள் ஒன்றன் பின் ஒன்றாய் வெளியாயின. **குடும்ப விளக்கு—இரண்டாம் பாகமும்** இதே ஆண்டில் வெளியாயிற்று. 1945இல் **தமிழியக்கம், எது இசை** வெளிவந்தன.

1946இல் திரு பழ. முத்தையாவை (முல்லை முத்தையா) தொகுப்பாளராகக் கொண்டு **முல்லை** இதழ் தொடங்கப் பெற்றது. அதே ஆண்டு இறுதியில் கவிதையேடான **குயிலும்** கூவத் தொடங்கிற்று. **குயிலின்** நோக்கத்தை ஆசிரியரான பாவேந்தர் இயம்புகிறார் :

**செந்தமிழ் நாட்டாட்சி பெற்றுச் செம்மைத்**
**திராவிடத்தில்**
**முந்தும் குறைகள் முடிக்கோமோ?—வந்து நமைச்**
**சீறும் பகைவர்க்குச் செந்தமிழர் கைதிறத்தைக்**
**கூறும் நமது குயில்.**

(தொடரும்) □

## முன்னோட்டம்

ஜூன் இதழில்...

மார்க்சியம் தோற்றுவிட்டதா
—அ. மார்க்ஸ்

மூன்றாம் உலக நாடுகளில் இலக்கியம்
—எஸ். வி. ராஜதுரை

மதுரை நாடகக் கலை விழா
—அரவிந்தன், பாபு

'காணி உறுதி' நூல் விமர்சனம்
—தி. க. சிவசங்கரன்

மற்றும் நாகார்ஜுனன், ஏ. எஸ். பன்னீர் செல்வன், கோணங்கி, வி.கே.பாலகிருஷ்ணன் அறிவுமதி ஆகியோரின் படைப்புகள்.

முன் அட்டை :

பெரிஸ்த்ரோய்க்கா, கிளாஸ்நாஸ்ட் ஆகியவற்றைப் பிரகடனம் செய்ததன் மூலம் மார்க்சிய-லெனினிய எதிர்காலம் பற்றிய மறு பரிசீலனையையும் விவாதத்தையும் புதிய அணுகுமுறையையும் தொடங்கி வைத்து புதியதோர் சகாப்தத்திற்கான அடையாளமென உலகெங்கும் பேசப்படும் மிகையில் கோர்ப்பச்சேவ்.

பின் அட்டை : அழகின் சிரிப்பு

□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழவர் ஜனநாயக முன்னணியின் மேதினப் பிரகடனம்

கேட்டுப்பயனில்லை—நாமாகவே பெற வேண்டியதுதான் என்ற நிலைக்கு வந்த சர்வதேச தொழிலாளர் வர்க்கம் 1847 இல் இருந்து '8 மணித்தியால சட்டப்படி வேலை' கோரிக்கையை முன்வைத்து 1886 மே 1ம் நாள் சிக்காக்கோ நகரில் வரலாற்று திருப்பத்தை ஏற்படுத்திய நாளே, இரண்டாவது அகிலத்தின் பின் 1890 மே 1 முதலாவது சர்வதேச தொழிலாளர் தினமாக பிரகடனப்படுத்தப் பட்டது. ஒரு நூற்றாண்டு நிறைவை இன்று நாம் நினைவில் கொள்ளுகின்றோம்.

இலங்கை மலையக மக்களின் நியாயமான கோரிக்கைகளையும், உரிமைகளையும் வென்று கொடுப்பதற்கு சர்வதேச பாட்டாளி வர்க்கம் குரல் கொடுப்பதுடன் வடக்கு - கிழக்கு விவசாயத் தொழிலாளர்களும், மலையக மக்களுடன் கைகோர்த்து எழவேண்டும். முதலாளித்துவத்தின் சதியான இனச்சகதியில்இருந்து மீண்டு வர்க்க ஒற்றுமைக்காய் அறைகூவல் விடுக்கின்றோம்.

இலங்கைத்தீவின் தேசிய வருமானத்தில் வருடா வருடம் 600 கோடி ரூபா வருமானமாக உழைத்துக் கொடுப்பவர்கள் மலையக தொழிலாளர்களே.

இவர்களுக்கு இன்று நாள் சம்பளமோ அல்லது மாதச் சம்பளமோ வழங்கப்படுவதில்லை. நாள் சம்பளம் பொதுவாக நடைமுறையில் ஆகக்குறைந்தது ரூ75.00 வழக்கத்தில் இருந்து வருகிறது. மாதச் சமபளம் 2500.00 வரை ஏனையோருக்கு வழங்கப்பட்டு வருகிறது. வாழ்க்கைச் செலவு அதிகரித்து வரும் இந்நிலையில் தோட்ட தொழிலாளரின் சம்பளம் அதிகரிக்கப்படாததால் அவர்கள் வறுமையில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களது சம்பளம் மாதச் சம்பளமாக மாற்றப்பட்டு அதிகரிக்கப்பட வேண்டும்.

இலங்கை அரசால் மலையகத்தில் 10 லட்சம் தொழிலாளர்களின் பிரஜாஉரிமை பறிக்கப்பட்ட பிறகு 1964ல் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தமும், 1974ல் சிறிமா - இந்திரா ஒப்பந்தமும் 1987ல் J.R-ராஜீவ் ஒப்பந்தமும் ஆகிய உடன்படிக்கைகளால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு இன்று உரிமை இழந்து அரசியல் உரிமை மறுக்கப்பட்டு, அந்நியர்களாக கருதப்பட்டு நாடு கடத்தப்படவிருக்கும் அனைவருக்கும் பொதுப் பிரகடனம் மூலம் பிரஜா வுரிமை வழங்கப்பட வேண்டுமெனவும்;

இலங்கைத் தீவில் நெருக்கடி தணிந்து சமாதானத்தை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கும் இத்தருணத்தில் இலங்கை ஜனாதிபதியின் புதிய அணுகு முறையால் இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்று தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள். இனப்பிரச்சினையில் ஜனாதிபதியின் சமாதான முயற்சி வெற்றி பெறவேண்டுமென்றும், அதே சமயம் தமிழ் பேசும் மக்களுக்கான ஒட்டு மொத்த அரசியல் தீர்வுக்கான அரசமைப்பையும் உருவாக்க வேண்டு மெனவும்;

மலையக தமிழ் மக்கள் பெரும் பான்மையாக வாழும் பகுதிகளில் தனியான தமிழ் அரசாங்க அதிபர் பிரிவும் (G.A); தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவும் (A. G. A.); தனியான கிராமசேவகர் பிரிவும் (G. S.) கொண்டு வரவேண்டுமெனவும் இதன் மூலம் மலையக மக்கள் நேரடியாக அரசுடன் தொடர்பு கொள்வதுடன் தேசிய அரசியலில் இணைந்து செயற்பட வாய்ப்பு ஏற்படும் என்பதால் தனியான தமிழ் நிர்வாகப் பிரிவுகள் ஏற்படுத்த வேண்டு மெனவும்;

மலையக மக்கள் தலை முறை தலை முறையாக வாழ்ந்து வந்த மண்ணில் ஒரு துண்டு நிலம் தானும் வழங்கபபடாமல் மண்ணுக்கே சொந்தம் இல்லாதவர்களாக ஆக்கபபட்டு இருப்பதால் குடியிருக்க காணியும் இருப்பிட வசதியும் செய்து கொடுக்க வேண்டுமெனவும் அரசாங்கத்திடம் கோரிக்கையாக விடுக்கின்றோம்.

**கோரிக்கைகள்**

மலையகத் தொழிலாளருக்கு மாதச் சம்பளம் வழங்குக.

1948-பெப்ரவரி 4ல் இலங்கைப் பிரஜைகளாக கணிக்கப்பட்ட மலையகத் தமிழர்களுக்கு பொதுப்பிரகடனம் மூலம் பிரஜா உரிமை வழங்குக.

தமிழ் பேசும் மக்களுக்கான ஒட்டுமொத்த அரசியல் தீர்வை ஏற்படுத்துக.

மலையக மக்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் வகையில் புதிய நிர்வாகப் பிரிவுகளை உருவாக்குக.

மலையக மக்களின் குடியிருப்புக் காணிகளையும் இருப்பிடங்களையும் அவர்களுக்கே சொந்தமாக்குக. □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

□

□

# அக்கம் பக்கம்
# உச்சம் எச்சம்

நாகார்ஜுனன்

□

## வல்லரசுகளும் வரையறைகளும்

ஒரு நாடு வல்லரசாகத் தன்னை வைத்துக் கொள்ள வேண்டுமானால் ஒரு சில புதிய வரையறைகளைக் கடைப்பிடித்தாக வேண்டும். அவற்றைத் தவறாமல் செயல்படுத்தி வருவது அமெரிக்காதான் என்பதால் இதைக் கூறுகிறேன். இதனால் மற்ற நாடுகள் வல்லரசுகளாக இல்லை என்பதல்ல விஷயம்; இருக்க முயலுகிறார்கள், கஷ்டமாக இருக்கிறது என்பதுதான் உண்மை.

1. வல்லரசு செய்யும் சர்வதேச ரீதியான குற்றங்கள், அடாவடித்தனங்கள், சுரண்டல், ஒடுக்குமுறை கொலைகள் ஆகியவற்றை விமர்சிக்கும் போக்குகளை உள்நாட்டில் வளரவிட வேண்டும். அப்போக்குகள் வளர்க்கப்படுவது வல்லரசுத் தன்மைக்கு எதிரானது அல்ல. (இந்தியா போல இலங்கைக்கு ராணுவத்தை அனுப்பிக் கொலை செய்ததை விமர்சிப்பதை தேசத் துரோகம் என்று சொன்னால் அது இந்திய அரசின் Weakness Strength அல்ல.) ஆக, வல்லரசுத் தன்மை என்பது, பொருளாதார இராணுவ ரீதியான பலம் மட்டும் அல்ல; அது விமர்சனங்களைத் தனது கலாச்சாரத்தின் பன்முகங்களில் ஒன்றாக மாற்றிக் காட்டும் அளவுக்கான நெகிழ்ச்சியாகும்.

2. பல்வேறு இட-கால-சூழ்நிலைகளுக் கேற்ப பல்வேறு உத்திகளைக் கையாள்வது என்ற அடிப்படை அறிவைச் செயல் படுத்துவது.

சிலி நாட்டில் வலதுசாரி ராணுவ சர்வாதிகாரியான பினோஷே என்பவரை (இவர் தான் 1972இல் சால்வடார் அயெண்டேவைக் கொன்று ஆட்சியைப் பிடித்தவர்) பதவியிலிருந்து இறங்கச் சொல்லி ஜனநாயகத்தை, டெலிவிஷன் மூலமாக உலகறியப் போட்டுக் காட்டி, கொண்டுவர முடியும்.

நிகராகுவாவில் பத்து வருடங்களாக Contras என்கிற கூலிப் படைக்கு ஆயுத சப்ளை செய்து (அதன் மூலம் இரான்/காண்ட்ரா கடத்தல் குற்றச் சாட்டில் மாட்டிக் கொண்டு) பார்த்து முடியாமல் போய் விட்டது. எனவே எப்போதும் யுத்தச் சூழ்நிலை இருப்பதைக் காரணம் காட்டி தனக்கு வேண்டிய வேட்பாளர் திருமதி வயலெட்டாவுக்கு மூன்று கோடி டாலர் பிரச்சாரப் பணம் ஒதுக்கிவிட வேண்டும். 3000 பேர் கொண்ட சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுவை முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் தலைமையில் அனுப்பி, உலகளாவிய தொலைக் காட்சி மூலம் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும். (இந்தியா இலங்கையில் இப்படிச் செய்திருந்தால் இப்போது தனது அத்யந்த நண்பர்களை ஒரிஸாக் காடுகளில் காப்பாற்ற வேண்டியிருக்காது.)

பனாமாவைப் பொறுத்தவரை தனக்கு நண்பனாக இருந்தாலும் தன்னை மீறிபோதை மருந்து வியாபாரத்தை நடத்தியதற்காக மானுவல் நோரிகாவை வேரறுத்துக் கைது செய்ய ராணுவத்தை அனுப்பி ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும்.

ஆக, ராணுவத் தாக்குதல், தேர்தல், மக்கள் கிளர்ச்சி, சர்வதேசக் கண்காணிப்பாளர் குழு, டெலிவிஷன் Coverage என்று எதுவாக இருந்தாலும் ஜனநாயகம் தான். அடுத்தது கியுபா என்கிறார்கள். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

## குப்பை மொழியின் அலகுகள்

தினமலர் பத்திரிகை, துக்ளக் போலவே மஹாபாரத முழு வசனம விநியோகித்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஹிந்து மத சேவைதான் செய்கிறது என்று எண்ணியிருந்த போது வாரா வாரமலராய் சென்னைச் சுவர்களில் வேறொன்றையும் பார்க்க முடிகிறது. சினிமா விளம்பரங்கள், சாதிச் சங்க மாநாடு அழைப்புகள் (செங்குந்த வீரனே திரண்டுவா), ஜெயலலிதா விபத்து முதல் சுவிசேஷக் கூட்டங்கள் ஈறாக சமா தான சகவாழ்வு ஒன்று போஸ்டர் அளவில் நடத்தப்படும் பிரதேசப் பரப்பு இது. இதில் **வாரமலர்** அளவில் காணப்பட்ட வித்தியாச மான வாசகங்கள்; 'சோஷியல் டைப்' மாணவிகளே, கன்னியரே உங்கள் காளையரின் ரத்த குரூப் தெரியுமா? கல்யாணமான ஆண் களை (காளையர் என்று போடவில்லை!) கன்னியர் (பெண்கள் என்று போடவில்லை!) விரும்புவது ஏன்? 'சைட்' அடிக்க கிளம்புமுன், இடி ராஜாக்களிடமிருந்து தப்பிக்க. வாய் வீச்சமா?

இப்படி நவீனத் தமிழ் இளைஞர்களுக்கு ஏகப்பட்ட அடவைஸ்கள், மிரட்டல்கள், பய முறுத்தல்கள். இதில் ரத்தம், கன்னியர், காளையர் என்பது சங்க காலம் முதல் வரும் சமாச்சாரம். சைட், குரூப், இடிராஜா என்பது நவீன ஆண்/பெண் தொடர்பான பிரச்சினைக் குரிய விஷயங்கள். வீச்சம் போன்றவை உடல் ரீதியான அருவருப்பு தொடர்பான மிரட்டல் கள். 'கோல்கேட்' வாங்காவிட்டால் கர்ல்பிரண்டை (Girl Friends) இழந்துவிடுவீர் கள் ரீதியிலான மிரட்டல்கள்.

ஆக, குப்பைமொழியானது இப்படி பலதளங்களை இணைப்பதாக நமக்கு வந்து சேருகிறது. பற்பசையிலிருந்து நிரோத் வரையி லான விற்கப்படும் பொருட்களை 'தேவை' என்று நமக்கு உணர வைக்கும் மொழி இப் பேர்ப்பட்ட ஒன்றுதான். அதாவது, குப்பை மொழி Serious-ஆக மாறும் சூழலில் 'பொருட் கள் தேவைதான்' என்ற உணர்வை நாம் நமக்குள்ளேயே உற்பத்தி செய்து, உறுதி செய்து கொள்கிறோம். அப்போது நாம் யார் என்ற சூன்யத்தை நோக்கி இட்டுச் செல்லும் கேள்வி எழுவதைத் தவிர்த்திட கடைக்குப் போய் சாவேஜ் ப்ளேட் முதல் சைனீஸ் சாப் பாடுவரை ஆர்டர் செய்து நுகர்கிறோம். தமது Identityயாக ஏதோ ஒன்று கட்டப்படு வதை அங்கீகரிக்கிறோம்.

### கடைசி செய்தியாக

தமிழர்கள் இப்போது மதிப்பது **இந்தியா டுடே** என்றால், சர்வதேச மத்தியதரவர்க்கம் எப்போதும் மதித்துவருவது அமெரிக்க **டைம்**. அதன் அட்டையில் தோன்றவிருந்த முதல் தமிழர், விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன். ஆனால் இப்போது அவரின் படம் உள்ளேதான் வருகிறது என்றாகி விட்டது. வருத்தம் தரக்கூடியது தான். பேட்டி கண்டவர் அனிதா பிரதாப். தமிழ் நாட்டுக்கு நன்கு பரிச்சயமான இவர் **சண்டே, இந்தியா டுடே**யின் நிருபர். முன்பு தீவில் பிரச்சனை கடுமையாகியதில், பத்திரிகை யாளர்கள் விதி விலக்கில்லாமல் சர்வதேச அங்கீகாரம் பெற முடிந்திருப்பதாய் விளைவு. மரணம் என்பது வரை அங்கீகாரமாய் அமைய லாம் என்பதற்கு ஓர் உதாரணம் ரிச்சர்டு ஸொய்ஸா. யுத்தம் தொடர்ந்ததற்கு ஒரு முக்கிய காரணம் இப்போது தெரிந்திருக் கலாம்.

அனிதா **டைம்** நிருபராக இருப்பதால் வாடகைக்கு ஹெலிகாப்டர் எடுக்கிறார்; உங்கள் ஊரில் கொரில்லாப் போராட்டம் நடந் தால் நிச்சயம் வருவதற்குத்தான். மொட்டை மாடிகளில் வட்டம் போட்டு காலியாக வைத்திருங்கள். தலையாய காரியங்களுக்கு உதவாமல் போகாது.

### தெரிந்த துறை தெரியாத செய்தி

அரசியலையே முழுநேரத் தொழிலாகக் கொண்டிருக்கும் வி. பி. சிங் என்கிற ஓவியர், கவிஞர், பிரதமராகிவிட்டார், ஓசைப்படாமல். பதவியேற்றவுடன் உருது மொழி வாசகமாக இவர் கூறியது: "பசித்தீயை உணவு கொண்டு தணித்துவிடலாம், மக்கள் இதயங்களிலுள்ள விடுதலைத் தீயை புரட்சி ஒன்றுதான் தணிக்கும்."


எழுத்தையே முழுநேரத் தொழிலாகக் கொண்டு அதனால் சிறைக்குப் போனவர் வாஸ்லாவ் ஹவேல். இவர் செக்கோஸ்லோ வாகிய ஜனாதிபதி ஆகிவிட்டார். நாடகாசிரிய ரான இவர் சொன்னது: "அரசியல்வாதிகள் நிஜமாகவே அழுவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும்." இந்தியாவில் இருந்தால் சொல்லி யிருக்க மாட்டார் என்கிறேன்!


ஜனாதிபதியாகப் போகும் இன்னொரு எழுத்தாளர் மரியோ வர்கஸ் லோஸா. பெரு நாட்டின் புகழ்பெற்ற நாவலாசிரியரான இவர் தேர்தலில் நிற்கிறார். இவர் வெற்றி பெறப் போவது நிச்சயமாகி விட்டது. ☐

வெளியிடுபவர் : இரா. திரவியம், 25 அருணாசலபுரம் மெயின்ரோடு, அடையாறு, சென்னை-20
அச்சிட்டோர் : ஜே. ரமணி, பிளேஸ் பிரிண்டர்ஸ் சென்னை-20

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

நட்புறவுப் பாலம்
பதிவு எண். டி.என்.எம்.எஸ்.(எஸ்)37.
மே,1990.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்